திருநெல்லை

ஆன்மீகத் திங்களிதழ்

குரோதி - ஐப்பசி - 2024 - நவம்பர் | இணைய வழி - மலர் - 2 - இதழ் - 3

அருள்மிகு வள்ளி தெய்வானை உடனுறை சண்முகநாதர்
தென்சபாநாயகர் திருக்கோவில், கோவிலூர்

திருநெல்லை

இணைய வழி ஆன்மீகத் திங்களிதழ்

குரோதி – ஐப்பசி

2024–நவம்பர்

இணையவழி மலர் 2 – இதழ் 3

(தனிச் சுற்றுக்கு மட்டும்)

சிறப்பாசிரியர்

பொற்கிழிக் கவிஞர்

சொ.சொ.மீ. சுந்தரம்

ஆலோசகர்

தமிழாகரர் தெ. முருகசாமி

ஆசிரியர் குழு

வெளியிடுபவர்

சீர் வளர் சீர்

நாராயண ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் மடாலயம்

கோவிலூர் 630 307

மானகிரி (அஞ்சல்)

(வழி) காரைக்குடி

சிவகங்கை மாவட்டம்

04565–236846

94433 37011

இணைய அச்சாக்கம்

திரு. கணேஷ்

ஸ்ரீபெரும்புதூர்

பொருளடக்கம்

பக்கம்

1. ஆசியுரை.. 3
2. கோவிலூர் ஆண்டவர் திவ்ய வரலாறு 8
3. எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி !.... 16
4. ஆதி சங்கரரின் சுப்ரமணிய புஜங்கம்..... 24
5. பண்டெழுவர் தவத்துறை......................... 27
6. கோவிலூர் புதையல்கள்.......................... 33
7. காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி பாடல் நலம்........................ 36
8. நல்லன எல்லாம் தரும் சுந்தர காண்டம்.. 42
9. இளையான்குடி மாற நாயனார் கதை........ 47
10. சிவாலயங்களின் சிறப்புகள்..................... 50
11. திவ்ய தேச கவிதை தரிசனம்.......... 53
12. பெரியபுராண கதை களம்....................... 58
13. தென்சபாநாயகர் கோவில் தரிசனம்........ 59
14. ஒலிப்பேழை.. 60
15. பயிற்சிப்பேழை....................................... 61
16. கோவிலூர் ஆண்டவர் நூலகம்............... 62
17. முந்தைய இதழ்கள்................................. 64

ஆசியுரை

சீர் வளர் சீர்

நாராயண ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் ஆதினகர்த்தர்

காசி விசுவநாதரை மாதந்தோறும் தரிசிக்கும் வாய்ப்பும், மாதத்தில் பல நாட்கள் காசியில் தங்கும் வாய்ப்பும், நாள்தோறும் காசியில் அன்னதானம் நடத்தும் வாய்ப்பும் இப்போது பரம்பொருளின் அருளால் கிடைத்து வருகிறது. காசியம்பதியில் தங்கி, காசி விசுவநாதரை நாளும் தொழும் பாக்கியம், காசியில் அன்னதானம் செய்யும் பாக்கியம் இவையெல்லாம் அடுக்கடுக்காக எம்பிரான் நமக்கு அருளிவரும் அருட்கொடைகள் ஆகும்.

கார்த்திக் மாத விளக்கொளியில் சப்த ரிஷி பூசை

ஒவ்வொரு முறை காசிக்குச் செல்லும்போதும் காசி விசுவநாதர் திருக்கோயிலில் சப்த ரிஷி பூசையைக் கண்ட பிறகுதான் நமது காசி அறப்பணிகள் தொடங்கும். காசியில் காலையில் மங்கள ஆரத்தி, நண்பகல் போக் ஆர்த்தி, முன்னிரவு சப்தரிஷி ஆர்த்தி,சிரிங்கார் ஆர்த்தி(சம்போ), இரவு சயன ஆர்த்தி என்று ஐந்துகால பூசைகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் சப்தரிஷி பூசை என்பது ஏழு ரிஷிக்கள் வந்து காசி விசுவநாதரைப் பூசிக்கும் சிறந்த பூசை முறையாகும். இப்பூசையைக் காண்பதற்குத் தனிக் கட்டணம் செலுத்தி, காத்திருந்து உரிய நேரத்தில் காசி விசுவநாதர் சன்னதியின் ஓரத்தில் அமர்ந்து பார்க்க வேண்டும். நமக்கு இவ்வருள் அனுபவம் அருகருகே கிடைத்து வருகிறது. நமக்கு தற்போது ஐப்பசி மாதம் நடைபெறுவதைப் போல் வடநாட்டில் கார்த்திக் மாதம் என்று இதனைக் கொண்டாடுகிறார்கள். விளக்குகள் ஏற்றி வைத்து

இறைவனை வழிபடுவது என்ற நடைமுறை வடநாட்டில் எங்கும் இம்மாதத்தில் பின்பற்றப்பட்டு வருகிறது. நூற்றி எட்டு விளக்குகள் ஏற்றி வைத்து காசி விசுவநாதருக்கு இம்மாதத்தில் சப்த ரிஷி பூசை சிறப்பாக கொண்டாடப் படுகிறது. இந்த அரியக் காட்சியைக் காண்பதற்கு கண்கோடி வேண்டும். இதனை நீங்களும் தரிசிக்க இந்தக் காணொளிக் காட்சியைக் காணுங்கள்.

என்ன அழகு. எம்பெருமான் விசுவநாதர், கையளவு விளக்கின் ஒளிக்கு மத்தியில் சோதிப் பிழம்பாய்க் காட்சியளிக்கும் அழகிய காட்சி கண்களை விட்டு மறையாது. இக்காட்சிக்கு நமக்குச் சிறப்புடன் அனுமதி அளிக்கப்பெற்று அருகில் இருந்து இந்த அருட்காட்சியைக் கண்டு அனுபவித்தோம். இதற்காக நமது உபயமாகஏழு நாட்களுக்கு தீபத்திற்கான நெய்யும் தரப்பட, எம்பெருமான் ஏற்றுக்கொண்டார். நமது கோவிலூர் மடாலயம் சார்பாக நாளும், சந்தனம் போன்ற பல அபிடேகப் பொருள்கள் காசி விசுவநாதர் பூசைக்கு வழங்கப்படுகின்றன. தற்போது சப்தரிஷி பூசைக்கு எம்பெருமானுக்கு நெய்வேத்தியமாக கீர் எனப்படும் பாயாசம் அளிக்கப்பெற்றால் சிறப்பாக இருக்கும் என்ற எண்ணம் அங்குத் தெய்வப் பணி ஆற்றும் பாண்டா என்ற தலைமைப்பூசாரியால் நமக்குச் சொல்லப்பட்டது. அதனை ஏற்று கடந்த ஒரு மாதமாக 11 லிட்டர் பாயசம் நம்அன்னதான சமையல் கூடத்தில் தயாரிக்கப்பட்டு நாள் தோறும் சப்தரிஷி பூசைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இதற்கு நாள் ஒன்றுக்கு சுமார் 1100 ரூபாய் செலவு ஆகிறது இத்திருப்பணியில் நம்மவர்களும் கலந்து கொள்ளலாம்.

குறிப்பிட்ட தொகையைநீங்கள்நடத்த விரும்பும் நாளில் செய்ய அதாவது நமது பிறந்தநாள், திருமண நாள் போன்றவற்றில் செய்ய வாய்ப்பு உள்ளது. அவ்வாறு விரும்புபவர்கள் உரிய தொகையை கோவிலூர் மடாலயத்திற்குச் செலுத்தினால் அது



பாயாசமாக காசி விசுவநாதருக்கு நெய்வேத்தியம் ஆகி மக்களுக்கு விநியோகப் பிரசாதமாக வழங்கும் பெரும் பாக்கியம் கிடைக்கும். அன்பர்கள் முன்வருவார்களாக.

இப்பூசையில் வைக்கப்பட்ட காசி விசுவநாதருக்கு அணிவிக்கப்பெற்ற வேட்டியையும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் உள்ளது. கோவிலூர் மடாலயத்தில் இதற்கான தொகையைச் செலுத்தி காசி விசுவநாதருக்குச் சார்த்தப்பட்ட கோடி வேட்டியைப் பெறலாம். இது குறித்து முன்னரே நாம் தெரிவித்து இருந்தோம்.

கோவிலூர் தென் சபாநாயகர் திருக்கோயிலில் காசி பூசை முப்பரிமான (Virtual Reality) ஒலி ஒளி காட்சி

காசிக்குச் சென்று அங்கு தங்கி காசி விசுவநாதரைத் தரிசிப்பது நமது வாழ்நாளில் பெறுவதற்கு அரிய பேறு ஆகும். இதற்குத் தோராயமாக ஓர் ஆளுக்கு பத்தாயிரம் ரூபாய் செலவாகலாம். ஆனால் காசியில் நடைபெறும் அனைத்து பூசைகளையும் நேரில் பார்ப்பது போல விஷேச கருவிகளை கண்களில் அணிந்து கொண்டு காண்பதற்கு காசி விசுவநாதர் கோயில் அறக்கட்டளை வசதி ஏற்படுத்தியுள்ளது.

தற்போது இந்த அரிய ஒலி ஒளி காட்சியைக் கோவிலூரியில் விஷேச கருவிகளை அமைத்துக் காண்பதற்கான வாய்ப்பு நமக்கு அளிக்கப்பெற்றுள்ளது. இக்காட்சியைக் காசி விசுவநாதர் கோயில் வளாகத்தைத் தவிர வேறு

எங்கும் காணமுடியாது. காசி விசுவநாதர் அறக்கட்டளையின் அனுமதியின் பேரில் தற்போது கோவிலூரில் உள்ள அருள்மிகு தென் சபாநாயர் திருக்கோவிலில் காண்பதற்கான அரிய சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. தங்கள் கண்களில் அக்கருவியை ஒரு சில மணித்துளிகள் அணிந்து கொண்டுப் பார்த்தால் நேரே காசி சன்னதியில் அமர்ந்து எப்படி காசி விசுவநாதரைத் தரிசிக்கமுடியுமோ அப்படி தரிசித்து அந்த தெய்வ அனுபவத்தைப் பெறலாம்.

காசி நகர் புலவர் பேசும் உரைதான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்ய வேண்டும் என்று பாரதி பாடினார். அவ்வழியில் காசி நகர் விசுவநாத தரிசனம் கோவிலூரில் தமிழில் கேட்கும் காணும் வாய்ப்பு கோவிலுருக்கு வரவுள்ளது. இதற்கான சிறு அன்பளிப்பு தொகை (ஏறக்குறைய 150 ரூபாய் என்ற அளவில்) பெறப்பட்டு காட்சி ஒன்றுக்கு இக்கட்டணம் என நிர்ணயிக்கப்பெற்று அத்தொகையும் காசி அறக்கட்டளைக்குச் சேரும்படி செய்யப்பெற உள்ளது. பெரும்பாலும் 2025 ஜனவரி முதல் நாளாம் புத்தாண்டின் தொடக்கம் முதல் காசிக் காட்சி இங்கு உலாவரும். அன்பர்கள் காசியைக் கோவிலூர் மண்ணில் தரிசிக்கலாம். கைலாயக் காட்சியை அப்பருக்கு திருவையாற்றில் அளித்ததுபோல் காசி விசுவநாதர் தெரிசனத்தை கோவிலூரில் அளிக்க எம்பெருமான் திருவுள்ளம் கொண்டுள்ளார்.

தற்போது கோவிலூர் தென் சபாநாயகர் திருக்கோயில் சுற்றுப் பிரகார நடைபாதை, மற்றும் நந்தவனம் போன்றவற்றுடன் சிறப்பான தோற்றம் பெற்று வருகிறது.

பெருகும் அன்னதான சேவை

வேதப் பள்ளிகளில் படித்து வரும் ஆயிரம் மாணவர்களுக்கு நாள்தோறும் மதிய உணவினை அன்னதானமாக வழங்கும் நற்பணியைக் காசி விசுவநாதர் அறக்கட்டளை கோவிலூர் மடாலயத்திற்கு வழங்கியது. தகுந்த வழிமுறைகள், இயந்திரங்கள், நல்ல பணியாளர்கள் கொண்டு இப்பணி தகுந்த திட்டத்துடன் நாளும் செய்யப்பெற்று வருகிறது. இது குறித்து பல நாளிதழ்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன. மேலும் அன்னதானத்தைச் சிறப்புடன் நடைமுறைப்படுத்தும் செய்முறைகளை படக்காட்சிகளாகவும் வெளி யிட்டுள்ளன. தரமான உணவு, தகுதியான முறையில் வழங்கும் சிவப் பணியைக் கோவிலூர் ஆதீனம்

சிறப்புடன் செய்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக தற்போது காசியில் இயங்கிவரும் புற்றுநோய் மருத்துவமனைக்கு இந்த அன்னதானத் திட்டம் விரவு படுத்தப்பட இருக்கிறது. இன்னுமொரு ஆயிரம் பேருக்கு வடநாட்டு மக்களின் விருப்பமான உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்பட இருக்கின்றது. இதற்கான பணிகளையும் நாம் தொடர வேண்டியுள்ளது. ஒரு நாளைக்கு ஐயாயிரம் என்ற எல்லையை நோக்கி இவ்வன்னதானத்திட்டம் பயன்பட இருக்கிறது. இதற்கு உதவி செய்த தெய்வ அனுகூலத்திற்கும், காசி விசுவநாதர் கோயில் அறக்கட்டளையின் அன்பிற்கும் நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்வாறு காசிக்கும் கோவிலூருக்கும் ஆன்மீகத் தொடர்பு மிகவும் நெருங்கி வருகிறது. இத்தொடர்பில் அன்பர்கள் தங்களையும் இணைத்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். எல்லா வளமும் நலமும் பெற்று மகிழ்வுடன் அனைவரும் வாழ எமது ஆசீர்வாதங்கள்.

நல்வழி பாடல்கள்

தண்ணீர் நிலநலத்தால் தக்கோர் குணம்கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால் – பெண்ணீர்மை
கற்பழியா ஆற்றல் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி

விளக்கம்:

கடல் சூழ்ந்த இந்த உலகத்தில் தண்ணீரின் குணத்தையும் பெருமையும் அது இருக்கும் நிலத்தின் தன்மையைப் பொறுத்து அமையும், நல்ல மனிதர்களின் குணமும் பெருமையும் அவர் செய்யும் தர்ம காரியங்களினால் அறியப்படும். கண்ணின் பெருமை கருணை பொங்கும் விழிகள் மூலம் வெளிப்படும். சிறந்த பெண்ணின் குணத்தையும் பெருமையையும் அவளின் கற்பு நெறி மாறாப் பண்பினால் அறியலாம்.

கோவிலூரின் கதை - 11

சீர் வளர் சீர்
நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் வரலாறு

சீர் வளர் சீர் நாச்சியப்ப
ஞான தேசிக
சுவாமிகள் வரலாறு
(12ம் பட்டம்)

- முனைவர் மு.பழனியப்பன்
தமிழ்த்துறைத் தலைவர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருவாடானை

கோவிலூர் மடாலயத்தின் பன்முக ஆற்றல்களும், கல்விப் பணி உயர்வுகளும், கோயில்கலைகளைக் காக்கும் அரிய பணிகளும், அரிய புத்தகங்களின் வெளியிட்டுப் பணிகளும், பல்வேறு கோயில்கள், மடங்களின் திருப்பணிகளும் செம்மையுற நடைபெற்ற காலம் என்பது சீர் வளர் சீர் நாச்சியப்ப

ஞான தேசிகரின் அருளாட்சிக் காலம்தான். சீர் வளர் சீர் முத்திராமலிங்க ஆண்டவர் ஞான தேசிக சுவாமிகளின் அருள் வாக்கான ‘‘எனக்குப் பின் வீரன் வருவான், பேரன் வருவான்’’ என்பதன்படி கோவிலூர் மடாலயத்திற்கு ஞான வள்ளலாக வந்து அமைந்தவர் சீர் வளர் சீர் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் ஆவார்.

பன்னிரண்டு என்ற எண் சிறப்பிற்குரியது. தமிழ் மொழியில் உயிர் எழுத்துகள் மொத்தம் பன்னிரண்டு. முருகனின் கரங்கள், தோள்கள், கைகள், கண்கள் ஆகிய அனைத்தும் தனித்தனியே பன்னிரண்டு. திருமுறைகள் பன்னிரண்டு. ஆழ்வார்கள் பன்னிருவர். ராசிகள் பன்னிரண்டு. சோதிடக் கட்டங்கள் பன்னிரண்டு. இவ்வாறு பன்னிரண்டு என்ற எண் சிறப்பிற்குரியதாக விளங்குகிறது. கோவிலூர் மடாலயத்தின் வரலாற்றில் பன்னிரண்டாவது ஞானகுருவாக விளங்கியவர் சீர் வளர் சீர் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் ஆவார்.

கோவிலூர் முத்திராமலிங்க ஆண்டவரின் மகன் வழியில் ஆறாவது தலைமுறையில் பேரனாகத் தோன்றியவர் நாச்சியப்ப சுவாமிகள். இவர் பூர்வாசிரமத்தில் மானகிரியைச் சார்ந்த திரு சிதம்பரம், திருமதி சீதாலட்சுமி ஆகியோரின் புதல்வராக 29.5.1923 ஆம் நாள் நாச்சியப்பர் அவதரித்தார்.தன் இளம் வயது கல்வியை மானகிரியில் உள்ள திண்ணைப் பள்ளியில் இவர் கற்றார். இதன்பின் காரைக்குடி மீனாட்சி சுந்தேரசுவரர் பள்ளியில் பள்ளிப்படிப்பினை நாச்சியப்ப சுவாமிகள் தொடர்ந்தார்.

இதன்பின் நாச்சியப்ப சுவாமிகளின் கல்வி சென்னையில் பெசண்ட் நினைவுப் பள்ளியில் பயின்றார். இக்காலத்தில் கலைவித்தகர் திருமதி. ருக்மணி தேவி அருண்டேல் அவர்களின் ஆதரவு இவருக்குக் கிடைக்கப்பெற்றது. இவ்வாதரவினால் கல்லூரிப்படிப்பினையும் பெற்றார் நாச்சியப்பர். நாச்சியப்பரின் புதுமை எண்ணம், திட்டமிட்ட செயல்பாடு ஆகியன அவரை திருமதி ருக்மணி அருண்டேல் அவர்களின் பெருநம்பிக்கைக்கும், பெருமதிப்பிற்கும் உரியதாக ஆக்கியது. அவர் இவரை அயல்நாடுகளுக்கு அனுப்பி வைத்து நிழற்படக் கலை வல்லுநராக உயர்த்தினார். உலகப்

உதவினார்.

இக்காலத்தில் குழந்தைக்கல்வி முறைக்கு வித்திட்ட திருமதி மரியா மாண்டிச்சேரி அம்மையாரின் உதவியாளராக நாச்சியப்பர் அமைந்து அவரின் முயற்சிகளுக்குத் துணைபுரிந்தார். கலாச் சேத்திரா நிறுவனம் வழியாக மாண்டிச்சேரி அம்மையாரின் நூல்கள் வெளிவரக் காரணமாக அமைந்தவர் நாச்சியப்பர் ஆவார். கிடைத்தற்கரிய பொக்கிஷங்கனான மாண்டிச்சேரி அம்மையாரின் நூல்கள் கலாஷேத்திராவின் வெளியீடுகளில் மிகப் புகழ் வாய்ந்தனவாகும். மேலும் புகழ் பெற்ற கோடாக் நிறுவனத்தில் நாச்சியப்பர் பணியாற்றி பல புது முயற்சிகளுக்கு வித்திட்டார். இதே நேரத்தில் லண்டன், நியுயார்க், டெட்ராய்ட் ஆகிய நகரங்களில் அரங்க ஒளியமைப்பு, மேடைக்கலை ஆகியன குறித்தும் அவற்றின் நுட்பங்கள் குறித்தும் கற்றுத்தேர்ந்தார். தாய்நாடு திரும்பிய நாச்சியப்பர், தன் தாய்வீடான கலாஷேத்திரா வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார். கலாஷேத்திரா நிகழ்ச்சிகளுக்கு அரங்க வடிவமைப்பு, புகைப்படப் பதிவு, நிகழ்வு ஏற்பாடு போன்ற பல பணிகளுக்கு நாச்சியப்பர்

நாச்சியப்பர் எடுத்த ருக்மணிதேவி அருண்டேலின் அவர் குழுவின் நடன நாடகப் புகைப்படங்கள் மிக அரிய பொக்கிஷங்கள் ஆகும். இவை தற்போது கோவிலூர் மடாயலத்தில் பாதுகாக்கப்பெற்று வருகின்றன.

கலாஷேத்திரா குழுவுடன் உலகின் பல நாடுகளுக்குப் பயணம் செய்து வெற்றிகரமாக கலை நிகழ்ச்சிகளை நடத்த நாச்சியப்பர் உதவினார். திருமதி ருக்மணி தேவி அருண்டேலின் மறைவிற்குப் பின் நாச்சியப்பர் அமெரிக்காவில் பெரும்பாலும் தங்க நேர்ந்தது. அங்கு அவர் பல ஓவியர்களின் நட்பினைப் பெற்றார். அவர்களின் படைப்புகளை நூறு பிரதிகளாக உருவாக்கும் நேர்த்தி நாச்சியப்பருக்கு கைவந்த கலையானது. வரையப் பெற்ற ஓவியத்தைப் போன்றே புகைப்படங்களை உருவாக்குவதில் கைதேர்ந்தவர் நாச்சியப்பர். புகைப்படத்தில் வண்ணச் சேர்க்கை, வண்ணப்பிரிப்பு ஆகியவற்றைச் செய்வதில் அவருக்கு அவரே நிகரானவர். இவரின் புகைப்பட ஓவியம் பல மில்லியன் டாலர்களுக்கு விற்பனையானது. இவரின் புகைப்படத்திற்குத் தனித்த அடையாளம் உலக அளவில் கிடைத்தது. இதன்வழி செல்வாக்கு மிக்கவராகவும் செல்வம் தழைத்தோங்கி வாழ்பவராகவும் நாச்சியப்பர் விளங்கினார்.

இவரின் அனுமன் குறித்த நூலும், தஞ்சாவூர் பெரிய கோவில் ஓவியங்கள் அடங்கிய நூலும் இந்தியாவில் இவர் புகழைப் பரப்பின. தான் சேர்த்த செல்வங்கள் அனைத்தையும் தன் தாய்நாடான இந்தியாவில் பல நிலைகளில் நிலைப்படுத்தினார் நாச்சியப்பர்.

சேர்க்காத திரவியங்கள் இல்லை. சேர்க்காத புகழ் இல்லை என்று வாழ்ந்து வந்த நாச்சியப்பரின் வாழ்வில் ஞானப்பார்வையும் பட ஆரம்பித்தது.1975 ஆம் ஆண்டில் அதற்கான ஒரு அறிகுறியும் தென்பட்டது. இவரின் நண்பர் பாலகிருஷ்ண சாஸ்திரிகள் என்பவர் நாச்சியப்பரை காஞ்சிபுரத்திற்கு இவரை அழைத்துச் சென்று காஞ்சி மாமுனிவர் சந்திரசேகர சரசுவதி சுவாமிகளைச் சந்திக்க வைத்தார். அப்போது இவரிடம் பேசிய காஞ்சி மாமுனிவர் ‘‘ தாங்கள் .நகரத்தார் கோவிலூரார் வீடு என்று குறிப்பிடுவதால் கோவிலூர் மடத்துடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளுங்கள் ” என்று ஆசி வழங்கினார். இதனைக் கேட்ட

நாச்சியப்பர் தனக்கும் கோவிலூர் மடத்திற்கும் சம்பந்தம் ஏற்படுவது சாத்தியமா என்றே எண்ணினார்.

காலங்கள் உருண்டோடின. தான் சேர்த்த செல்வத்தைத் தாய்நாட்டில் நல்ல வழியில் பயன்படுத்த வேண்டும் என்று நாச்சியப்பரின் உள்மனம் கட்டளை யிட்டது. இந்தக் கட்டளையை ஏற்று சென்னைக்கு அருகில் இந்தியன் இன்ஸ்டியுட் ஆப் இண்டாலாஜி என்ற நிறுவனத்தையும், சனாதன தர்ம பல்கலைக்கழகத்தையும் நிறுவ அவர் முன்வந்தார். அந்நேரத்தில் இதன் திறப்புவிழாவிற்கு அப்போதைய கோவிலூர் மடாலய சீர் வளர் சீர் காவி விசுவநாத சுவாமிகள் அழைத்து வரப்பெற்றார். இத்தொடக்க விழாவே நாச்சியப்பரின் ஞான வாழ்வின் தொடகத்திற்கு அடிகோலியது.

சீர் வளர் சீர் காசி விசுவநாத சுவாமிகளின் கனவில் திருநெல்லை அம்மன் தோன்றி அடுத்த பட்டமாக அமையத் தகுதியானவர் நாச்சியப்பர் என்று திருவருள் காட்டியது. இதனை மனத்துள் கொண்ட பதினொன்றாம் பட்டம் மந்தன உயிலில் தனக்குப் பின் நாச்சியப்பரே பட்டம் ஏற்கவேண்டும் என்று பதிவு செய்தார். இப்பதிவே நாச்சியப்பரை பதினொன்றாம் பட்டம் திருநிறைவு அடைந்தபின் ஞான பீடத்தில் ஏற்றி வைத்தது. பிரம்ம சபையில் அமர வைத்தது.

1995 ஆம் ஆண்டு ஜுலை மாதம் பதினான்காம் நாள் நாச்சியப்பர் சீர் வளர் சீர் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகளாக ஞான வாழ்வு மேற்கொண்டார். அன்று முதல் கோவிலூர் வேதாந்த மடம் பழம் பெருமையையும், புதுப் பொலிவையும் ஒருங்கே கொண்டு உலகின் உயர்விடத்தைப் பெறத் தொடங்கியது.

சீர் வளர் சீர் நாச்சியப்ப சுவாமிகள் தன் ஞானவாழ்வு ஏற்ற நிலையில் தான் சேகரித்த அத்தனைப் பொருள் செல்வத்தையும் மடத்திற்கு ஆக்கினார். மடத்தின் நிர்வாகத்தில் சீர்மையைக் கொண்டுவந்தார். பன்னிரு கிளை மடங்களைச் செழுமைப்படுத்தினார். இவை தவிர மூன்று புதிய கிளைமடங்களையும் இவர் உருவாக்கி வளர்த்தெடுத்தார்.

நாச்சியப்ப சுவாமிகள் காலத்தில் பல்வேறு திருப்பணிகள் நடத்தப்பெற்றன. 1997 ஆம் ஆண்டு திருவண்ணாமலை ஈசானிய மடம் புதுப்பிப்பு, பொருள் வைத்த சேரி மடம் மற்றும் அருள்மிகு சுவர்ணபுரிசுவரர் திருக்கோயில் திருப்பணி மற்றும்

குடமுழுக்கு, மருத வனம் அருள்மிகு மருதவனேஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு, திருக்களர் வீரசேகர ஞான தேசிகரின் அதிட்டானக் கோயில் குடமுழுக்கு, சிதம்பரம் கோ. சித மடத் திருப்பணி, மேட்டுப் பாளையம் சபாபதி சுவாமிகள் மடத் திருப்பணி, எறும்பூர் தத்துவராய சுவாமிகள் மடம் திருப்பணி, திருக்களர் அருள்மிகு பாரிஜாதவனேஸ்வரர் ஆலயத் திருப்பணி, கோவிலூரில் ஆண்டவர் அருட் கோயில் திருப்பணி, கோவிலூர் அருள்மிகு திருநெல்லை உடனாய கொற்றவாளீசர் திருக்கோயில் திருப்பணி, மானாமதுரை நாராயண சுவாமிகள் மடம் திருப்பணி, வளவனூர் சண்முக சுவாமிகள் அருட்கோயில் திருப்பணி, திருக்களர் புதிய தேர் திருப்பணி, கோவிலூர் தேர் திருப்பணி போன்ற பல திருப்பணிகள் நாச்சியப்ப சுவாமிகள் காலத்தில் நிகழ்த்தப்பெற்றன.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஐவர் நகரத்தார் பெருமக்கள் ஆவர். அவர்களின் முக்தி பெற்ற தலங்களில் ஆண்டு தோறும் அவர்களின் முக்தி பெற்ற நட்சத்திரத் தன்று வழிபாடும் அன்னதானமும் செய்யத் திருவுளம்

வளர்த்தெடுப்பதில் தனிக் கவனம் செலுத்தினார் சீர் வளர் சீர் நாச்சியப்ப சுவாமிகள். தேவார இசை, நாகசுரம் மற்றும் தவில் வாசிப்புக் கலை, சிற்பக் கலை, ஐம்பொன் சிற்பக் கலை, தேர் சிற்பக் கலை, வேத ஆகமக் கலை ஆகியவற்றை வளர்க்க தனித்தனி கல்லூரிகளைச் சுவாமிகள் தொடங்கினார். இவற்றை ஒருங்கிணைத்து கோயில் கலைப் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட வேண்டும் என்பது சுவாமிகளின் கனவு. இவை தவிர தேவாரம், முத்துசாமி தீட்சிதர் பாடல்கள் போன்றன இசைவட்டுக்களாக சுவாமிகளின் பேராதரவினால் உருவாகின. கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள், சங்க இலக்கியங்கள், திருமந்திரம் ஆகியன சுவாமிகளால் செம்பதிப்புகளாக வெளியிடப் பெற்றன. அவ்வப்போது வேதாந்த மாநாடுகள், தமிழ் வளர்ச்சி மாநாடுகள் சுவாமிகளால்

கொண்டு அதனையும் செய்துவர ஆவனவற்றை நாச்சியப்ப சுவாமிகள் செய்தார்.

முதலாவதாக சுவாமிகள் கோவிலூரில் மழலையர் கல்விக் கூடத்தை ஏற்படுத்தினார். தொடங்கிய நாளில் பள்ளிக்கு வந்து சேர்ந்த சிறுபிள்ளையின் பெயர் திருநெல்லை. திருநெல்லை கல்விக் கூடத்தில் முதலடி எடுத்து வைத்தாள். அதன்பின் பல கல்வி நிறுவனங்கள் தோன்றின. கோவிலூர் ஆண்டவர் உடற்ப யிற்சிக் கல்லூரி, சமுதாயக் கல்லூரி, பல் தொழில் நுட்பக் கல்லூரி போன்றன சுவாமிகளின் காலத்தில் தொடங்கப்பெற்று வளர்ந்து வருகின்றன.

மேலும் கோயில்கலைகளை

நடத்தப்பெற்றன. அனைத்து ஊர் நகரத்தார் கூட்டமும் சுவாமிகளின் காலத்தில் நடத்தப் பெற்றது.

சமுதாய வளர்ச்சிக்காக, வேதம் படிப்போருக்கு உதவித் தொகை, வட்டியில்லா கல்விக் கடன், முதியோர் உதவித் தொகை, திருமண உதவித் தொகை போன்றனவும் கோவிலூர் மடத்தினால் செய்யப்பட சுவாமிகள் காரணமாக இருந்தார்.

மேலும் காசி, டில்லி, ஹரிதுவார் போன்ற இடங்களில் கோவிலூரின் மடங்களை நிறுவிய பெருமை சீர் வளர் சீர் நாச்சியப்ப சுவாமிகளையே சாரும்.

இவ்வாறு அரும்பெரும் பணிகளை ஆற்றிய சீர் வளர் சீர் நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள் 2011 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் மூன்றாம் நாள் தன் எண்பத்தெட்டாம் வயதில் நிறைவாழ்வினைப் பெற்றார்.

கவிஞர் மீனவன் எழுதிய நாச்சியப்ப சுவாமிகள் சதமணி மாலையில் இருந்து சில பாடல்கள்.

வீரனார் செய்து காத்த வெற்றிசால் பணிகள் எல்லாம்
பேரனார் நாச்சி யப்பர் பெரும்பணி யான தம்மா
தேரொன்று நெல்லைக் காகத் திரள்பல கோடி தந்தே
ஊரெலாம் மகிழச் செய்தார் ஒப்பிலா நாச்சி யப்பர்

காரெனப் பொழிந்த கைகள் கருணையே இலங்கு கண்கள்
ஊரெலாம் திரண்டு வ்ந்தே உவந்திடப் பணிந்த கால்கள்
சீரெலாம் பொலிந்த நூல்கள் சிறப்புறச் செய்த மேதை
பாருலாம் நாச்சி யப்பர் பதமலர் போற்றி போற்றி

மாதவ்ர் பலரும் கூடி மாண்புசால் வேதாந் தத்தை
ஓதவே செய்து வைத்த உயர்முத்தி ராம லிங்கர்
பாதமே மறவார் ஆகிப் பற்பல கல்விச் சாலை
ஆதியாய் அமைத்த ஞானி அவரடி போற்றி போற்றி

சீர் வளர் சீர் நாச்சியப்ப சுவாமிகளின் அருள் வரலாறு காண கேட்க கீழ் காணும் இணைப்பை சொடுக்கவும்

எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி !

(பகுதி - 1)

டாக்டர் ஜெயபாலன் வள்ளியப்பன்,
ஈப்போ, மலேசியா

உலகில் முதல் மனிதன் வாழ்ந்தது உயர்ந்த இடங்களான குன்றுகள். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி என்று தமிழ்க் குடியின் தொன்மை யினை சொல்வார்கள் ஆய்வாளர்கள். ஆதியிலே தோன்றிய மூத்த தமிழ் குடி லெமோரியா கண்டம் என்று சொல்லக் கூடிய குமரி கண்டத்தில் வாழ்ந்த காலத்தில் அவன் புரிதலுக்கு அப்பாற்பட்ட இயற்கை சீற்றங்களையும் நோய் நொடிகளிலிருந்தும் காத்துக் கொள்ளும் பொருட்டு அந்த இயற்கையையே அச்சத்துடன் வணங்கினான். காலப் போக்கில் இந்த அச்சம் பக்தியாக பரிணாமம் கண்டது. மரத்தடிகள் இறைவழிபாட்டின் கூடாரங்களாயின. அவனை பாதுகாத்து கொண்டிருந்த வேல் கம்பு வேலாயுதம் என்று அந்த மரங்களுக்கு அடியில் நட்டு வைக்கப்பட்டது. அந்த ஆதி மனிதனுக்கு ஆகமம் தெரியாது, மந்திரம் தெரியாது. ஆனால் இயற்கையின் மேல் நம்பிக்கை இருந்தது. அவன் இறைவனின் அம்சமாக வணங்கிய வேல் அவனுக்கு நம்பிக்கையை கொடுத்தது. அந்த வேலுக்கு வழிபாடு செய்பவன் வேலன் என்று அழைக்கப்பட்டான்.

உயர்ந்த நிலமான குறிஞ்சி நிலத்தில் விளையும் திணை மாவும், தேனும் வரகரசியும், ஆட்டு இரத்தமும் அன்று இறைவனுக்கு படைக்கும் படையல்களாயின. இயற்கையே இறை தன்மை உடையது என்று புரிந்துக் கொண்ட தமிழன் அந்த அழகுக்கு முருகு என்று பெயரிட்டான். இதுதான் முருக வழிபாட்டின் தோற்றம்.

பிற்காலத்தில் குறிஞ்சி நிலத்தில் தோன்றிய முருக வழிபாடு பல பரிணாமங்களை கண்டு இன்றைக்கு

என்று ஆறாவமுதன் கூறுகின்றார். அதே போலவே பழைய ஏற்பாட்டில் சொல்லப்படுகின்ற தீர்க்க தரிசி “மோசஸ்” முருகனின் பல தன்மைகளோடு ஒத்துப் போகின்றார். இதை தமிழகத்தின் ஆய்வாளர்

பல தத்துவங்களோடு நாம் வணங்கும் பரம் பொருளாக பரிமளிக்கிறது. அதே வேளையில், உலகெங்கிலும் பல்வேறு இடங்களில் முருக வழிபாட்டினை போல் இறைவழிபாட்டை அந்தந்த இடங்களிலுள்ள மனிதர்கள் கொண்டுள்ளதை ஆய்வாளர்கள் பதிவு செய்துள்ளார்கள். ஆறாவமுதன் என்ற ஆராய்ச்சியாளர் பாக்குஸ் டையோனிசாஸ் கிரேக்க தெய்வத்திற்கும் கந்தனுக்கும் இடையேயுள்ள பல ஒற்றுமைகளை சுட்டிக் காட்டுகிறார். பாக்குஸ் அக்னி குமாரன். கந்தனும் சிவபெருமானின் நெற்றிக்கண் தீப்பொறியிலிருந்து உருவானவன். பாக்குஸ் சோம்லே என்ற பொய்கையில் வளர்கிறான். கந்தன் சரவணப் பொய்கையில் வளர்கிறான். பாக்குஸ் டையானா என்ற தேவதையோடு இணைத்து பேசப்படுகின்றான். கந்தன் வள்ளி நாச்சியாரோடு களித்து திரிகின்றான். ஆக, முருகன் தமிழகத்துக்கு மட்டுமல்ல கிரேக்க நாட்டுக்கும் பொதுவானவன்

நா. வானமாமலை தன்னுடைய பண்பாடு தத்துவம் என்னும் நூலில் நிறுவியுள்ளார். இதன் மூலம் முருகனை தமிழர்கள் வழிபட்ட அதே வேளையில் முருகனை ஒத்த ஒரு வடிவத்தை கடவுளாக வழிபட்டதை நாம் அறிகிறோம். அன்பின் மிகுதியால் இறைவனை மொழியோடும் இனத்தோடும் தொடர்புப்படுத்தி நாம் முருகனை தமிழ்க் கடவுளாக கொண்டாடினாலும் அண்ட சரசரங்களையெல்லாம் ஆழுகின்ற ஒப்பற்ற இறைவன் மதங்களை மட்டும் கடந்தவன் அல்ல, பூலோக எல்லைகளையும், மொழிகளையும் கடந்தவன் என்பது உலகெங்கிலும் உள்ள பழங்கால முருக வழிபாட்டினை ஆய்வு செய்வதன் மூலம் அறியலாம்.

தமிழகத்தில் முருக வழிபாட்டின் தொன்மை

தமிழர்களை பொருத்தவரை முருகன் வரலாற்றுக்கு முந்திய கடவுள். கொற்றவை மைந்தனாக தாய்வழி சமூகத்தில் தோன்றிய கடவுள்.

பிற்காலத்தில் வேட்டையாடும் மனிதர்க் குலம் விவசாயம் செய்யும் நிலவுடமை சமுதாயமாக மாறிய பொழுது தந்தை வழி சமூகத்தில் முருகனை பொருத்தி சிவன் மைந்தனாக கொண்டாடினார்கள்.

வரலாற்றுக்கு முன்திய காலத்தில் கற்காலத்தில் வேல் வழிபாடுதான் முருக வழிபாட்டின் குறியீடாக அமைந்தது. அங்கே முருகருக்கு மனைவி கிடையாது. பின்னாலில் தத்துவங்கள் வளர்ந்த பிறகு வள்ளியும் தெய்வயானையும் இச்சா சக்தி, கிரியா சக்தியின் குறியிடுகளாக போற்றப்பட்டார்கள். தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் சேயோனும் மாயோனும் சிறப்பிக்கப்பட்டார்கள். சங்க நூலான பரிபாடலிலும், குறுந்தொகையிலும் வேலன் வெறியாடல் என்ற நிகழ்வு குறிப்பிடப்பட்டுள்ளது.

கடம்ப மரத்தடியில் வேலை நிறுத்தி வேலுக்கு படையலிட்டு அங்கே பூசாரியாக இருக்கக் கூடிய வேலன் என்பவன் மூலம் முருகன் வந்து குறி சொல்கின்றான். இது தான் வேலன் வெறியாடல். அங்கு பூசாரி சொல்லும் குறி பூசாரியுடையது அல்ல முருகன் சொன்னதே என்று நம்பினார்கள். ஆரம்பத்தில் முருகனின் வாகனம் யானைத் தான். ஆடும் மயிலும் பிற்காலத்தில் சேர்ந்துக் கொண்டன. ஆதி தமிழனின் முருக வழிபாடு வைதீக கலப்பிற்குப் பின் சைவ நெறியில் இன்று நாம் பார்க்கும் தனித்திருக்கும் கௌமார நெறியாகவும் ஒன்று சேர்ந்த சைவ சித்தாந்த நெறியாகவும் க டை ப் பி டி க் க ப் ப டு கி ன் ற து . பரிபாடலுக்கு பிறகு திருமுருகாற்றுப்படை முருகப் பெருமானின் தோற்றங்களையும் அவன் குடிக் கொண்டுள்ள வழிபாட்டு தலங்களையும் அங்கே நிலவி வந்த இயற்கை சூழலையும் அந்தணர் / வேடுவர் வழிபாடு என்ற இருவகை வழிபாட்டு முறைகளையும் அழகு தமிழில் ஆற்றுப்படுத்துகின்றது. தமிழின் முதல் பக்தி இலக்கியம் திருமுருகாற்றுப்படை, எட்டுத்தொகை, பதினென் கீழ்கணக்கு என்று வகைப்படுத்தப்பட்டுள்ள சங்க இலக்கியத்தில் முருகனை பரம் பொருளாக கொண்டு பக்தி நயம் சொட்ட நக்கீரரால் எழுதப்பட்டது முருகாற்றுப்படை பிற்காலத்தில் சைவ பெருமக்களால் பதினொராம் திருமுறையில் ஒன்றாக சேர்க்கப்பட்டு இது திருமுருகாற்றுப்படை என்று சிறப்பிக்கப்பட்டது.

சங்க இலக்கியங்களுக்கு பிறகு ஆங்காங்கே திருமுறைகளிலும் முருகபெருமானை சிறப்பித்து கூறியுள்ளனர். பதிமூன்றாம் நூற்றாண்டில் கச்சியப்ப சிவச்சாரியார் தாம் தமிழில் எழுதிய கந்த புராணதில் முருக வழிபாட்டை சைவ சித்தாந்த நெறியோடு பிணைக்கின்றார். அதை பதினைந்தாம் நூற்றாண்டில் வந்த அருணகிரிநாதர் வழிமொழிந்த முருகன் சிவபெருமானின் மறு

படம் 1

இன்றைய தூத்துக்குடி மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டத்திற்கு அருகில் அமைந்துள்ள ஆதிச்சநல்லூர். (7000வருடங்களுக்கு முற்பட்டது)

பதிப்பு என்ற தத்துவத்தை உறுதி செய்கின்றார். கௌமாரம் வேறு, சைவ சித்தாந்தம் வேறு என்ற தவறான தத்துவத்து தகர்த்து எரிகின்றார். பிற்காலத்தில் வந்த முருகனடியார்கள் அருணகிரிநாதர் காட்டிய பாதையிலேயே தடம் மாறாமல் சென்றுள்ளனர்.

ஆதிச்சநல்லூர் அகழ்வராய்ச்சியின் பதிவுகள்

முருக வழிபாட்டின் தொன்மையை காட்டுவது ஆதிச்சநல்லூர் அகழ்வராய்ச்சி ஆய்வுகள். இன்றைய தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் ஸ்ரீ வைகுண்டம் என்ற ஊருக்கு அருகில் அமைந்துள்ளது ஆதிச்சநல்லூர். பழமையான கல்லும் உலோகமும் கலந்த காலம் எனப்படும் சால்கோலித்திக் என்ற ஏழாயிரம் வருசங்களுக்கு முற்பட்ட நாகரீகம் ஆதிச்சநல்லூர் காலம். கிட்டதட்ட கி.மு. ஆயிரத்தி நூற்று ஐந்நூறு வருடங்களுக்கு முற்பட்டது என்று வகைப்படுத்தலாம்.

மிகத் தொன்மையான ஆதிமனிதர் இங்கு வாழ்ந்தனர். ஆற்றங்கரைகளில் மனித நாகரீகம் முதலில் தோன்றி வளர்ச்சிக் கண்டுள்ளது. நாடோடிகளாக அழைந்த ஆதிமனிதன் நீர்வளம் மிகுந்த ஆற்றங்கரைகளில் தங்கி உளவு தொழில் செய்து நிலவுடமை சமுதாயமாக மாறினார்கள். ஆதிச்சநல்லூர் தமிரபரணிக் கரையில் அமைந்துள்ளது. இங்கு பெரிய பெரிய தாழிகள் கிடைத்துள்ளது.

போரில் மரணமடைந்தவர்களையும், இயற்கையாக மரணமடைந்தவர்களையும் பெரிய பானைகள் போன்ற தாழிகளில் வைத்து அவர்கள் பயன்படுத்திய ஆபரணங்களையும், ஆயுதங்களையும் அதற்குள் வைத்து அதன் மேல் பெரிய கருங்கற்கள் வைத்து புதைத்துள்ளனர். இந்த கல்லும் இரும்பும் தோன்றிய காலக்கட்டத்தில் எழுத்துக்கள் தோன்றவில்லை. அதனால் எழுத்து பதிவுகள் இல்லாத காலம் இந்த தாழிகளை அடைத்து வைத்த காலக்கட்டம். இந்த தாழிகளுக்கு உள்ளும் வெளியிலும் இரும்பு ஈட்டிகள், திரிசூலங்கள், வாள்கள், வேல்கள், வெங்கலத்தால் செய்யப்பட்ட சேவல் உருவங்கள், சேவல் கொடி போன்ற அமைப்புகள் கிடைத்துள்ளன. மேலும் காவடி ஆடுவோர் வாயை மூடப் பயன்படுத்தும்

படம் 2

Sculpture of the god Skanda, from Kannauj, North India, circa 8th century

படம் 3

Kartikeya(Kâtkâ Dyao) is worshiped with a bow and an arrow by the Hajongs of Northeastern India.

தங்க வாய் மூடிகள், திரிசூலத்தில் சேவல் உருவங்கள் காணப்பட்டன. இந்த சான்றுகளையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது தமிழ்நாட்டின் வரலாற்று முற்காலமான ஆதிச்சநல்லூர் நாகரிகத்தில் முருக வழிபாடு இருந்தற்கான சான்றுகள் உள்ளன. முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் ஆதிச்சநல்லூரிலிருந்து சில தூரங்களில் உள்ளது என்பது குறிப்பிடப்படுகிறது.

வட நாட்டிலும் கங்கை சமவெளியிலும் கந்தன் உருவங் கொண்ட அகல்வராய்ச்சி சான்றுகள் கிடைத்துள்ளன. உஜ்ஜெயனியில் கி.மு. இரநூறாம் மூந்நூறாம் வருடங்களுக்கு முன்திய கந்தன் உருவம் அடிக்கப்பட்ட காசுக்கள் கிடைக்கப்பட்டுள்ளன. “சுப்ரமண்ய”, ஸ்கந்த என்ற எழுத்துகளோடு சேவல் கொடியும் மயில் உருவமும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ளன. இது உஷான் அரச வம்சத்தினரின் நாணயங்கள்.

வட இந்தியாவில் முருக வழிபாடு

வட இந்தியாவில் முருகனை கார்த்திகேயன் என்றும், கந்தன் என்றும், சுப்ரமண்யன் என்றும், கி.மு இரண்டாம் காலத்திற்கு முன்திய திலிருந்து வழிபட்டு வந்துள்ளனர். ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மகாகவி காளிதாசனின் சமஸ்கிருத நூலான குமாரசம்பவத்தில் முருகனின் அவதாரமும், புராணகதைகளும் கூறப்பட்டுள்ளன. கி.மு. ஏழாவது நூற்றாண்டில் எழுதப்பட்ட சாண்தோக்கிய உபநிஷத்தில் முருகனை கந்த குமாரனாக தேவர்களின் படை தலைவனான சனத் குமாரனோடு இணைத்து கூறபட்டுள்ளது. மகாபாரதத்திலும் வால்மீகி ராமாயணத்திலும் கார்த்திகேயனைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. பண்டைய கால வேத இலக்கியங்களில் அக்னியை சூரியனோடு ஒப்பிட்டு சுப்பிரணியன்

படம் 4

Gupta aged coins bearing peacock image

அக்னியின் இன்னொரு அம்சம் என்று கூறுவார்கள். மேலும் வடநாட்டில் குமார குப்தா காலங்களில் (கி.பி. 415416) கிடைக்க பெற்ற கல்வெட்டுகளிலும் வெங்கல சிற்ப வேளைபாடுகளிலும் அப்போதிருந்த கந்த வழிபாடு அறியபடுகின்றது.

கி.மு. 500ஆம் நூற்றாண்டுகளில் வேதத்துக்கு உரை எழுதிய பதஞ் சலி முனிவர் கார்த்திகேயனைப் பற்றி கூறிப்பிடுகின்றார். ரிக் வேதத்திலும் குமரக்கடவுளைப் பற்றிய குறிப்புகள் பரவலாக காணப்படுகின்றன. வடநாடுகளில் அரியான, பஞ் சாப், ராஜஸ்தான் மற்றும் உத்தர பிரதேசங்களை ஆண்டு வந்த யவ்தேயர் மற்றும் குஷன் பரம்பரை யினர் கார்த்திகேயனை வழிபடு கடவுளாக கி.பி. முதலாம் நூற்றாண்டில் கொண்டுள்ளது அவர்களது நாணயங்கள் மூலமாக அறியப்படுகிறது.

முருகனை வழிபடுத் தெய்வமாக கொண்ட இந்துக்கள் மதம் மாறுகின்ற பொழுது அவர்கள் சார்ந்துள்ள மதங்களுக்கும் முருக வழிபாட்டை அறிமுகப்படுத்தினார்கள். இவ்வாறு தான் முருக வழிபாடு பௌத்த மதத்திற்கு பரவியது. பௌத்த மதத்தில் முருகனை காக்கும் தெய்வமாக வே தோ பூ சா கீணிமி ஜிபிளி நிஹி ஷிகி அல்லது போதி சத்துவ கந்தன் என்ற பெயரில் புத்த தருமத்தை காப்பவனாக கருதுகிறார்கள்.

இலங்கையில் முருக வழிபாடு

இலங்கையில் இலத்தமிழர்கள்



படம் 12

மட்டுமல்ல சிங்களவர்களும் முருகனை வழிபட்டார்கள். தமிழ் நாட்டிலிருந்து வந்த தமிழர்களுக்கு முன்பாகவே இலங்கை மண்ணில் தமிழர்கள் மண்ணில் வாழ்ந்த தமிழ் மக்கள் தமக்கென சில பண்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் கொண்டிருந்தார்கள் என்ற செய்தியை சமீபக் கால ஆய்வுகள் மூலம் அறிகிறோம். கி.மு. எட்நூறாம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே முருக வழிபாடு இலங்கையில் இருந்தது என்பதை அக்குறுகோட மற்றும் கண்டரோட்டை போன்ற இடங்களில் கிடைத்த நாணயங்கள் முலமாக அறிகிறோம். இந்த நாணயங்களில் சேவல் சின்னமும் மயிலும் தமிழ் பிரமின் எழுத்துக்களும் உள்ளன.

பதிமூன்றாம் நூற்றாண்டு முதல் ஜப்னாவை ஆண்டு வந்த நல்லூர் மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் வழி ஒரு புறத்தில் மன்னர்களின் தலை உருவம் இன்னொரு புறத்தில் நந்தியும் மயிலும் எதிர் எதிரே இருக்க சேது என்கின்ற வார்த்தை நந்தியின் கீழே குறிக்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

முருகனை கந்தன் என்று தேவாரத்தில் சிறப்பித்த திருஞானசம்பந்தர் தோன்றியது ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டு என்பார்கள். கிட்டதட்ட இதே காலக்கட்டத்தில் ஜப்னாவை ஆண்டு வந்த ஒரு மன்னன் தன் பெயரை கந்தர்மலையாரியர் கோன் இலங்கை பத்மநாதன் (1980) என்கின்ற ஆய்வாளர் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் கந்தன் என்ற பெயர் இலங்கையில் ஆறாவது நூற்றாண்டிலேயே பிரபலமாக இருந்துள்ளது தெரியவருகிறது.

மூன்றாம் நூற்றாண்டுகளில் இலங்கையில் முருக வழிபாடும் வைணவம் மற்றும் சைவ வழிபாட்டு முறைகளும் இருந்ததற்கான



படம் - 1
ஸ்ரீ லங்காவின் தென் பகுதியில் உள்ள அக்குருகோடாவில் கிடைத்த நாணயத்தின் ஒருபுறம் 'மயிலும்', இன்னொருபுறம் பிரம்மியில் எழுதப்பட்டு உள்ள 'மகாட்டன்' என்ற வார்த்தையும் உள்ளன

படம் - 2
ஸ்ரீ லங்காவின் வடக்குப் பகுதியில் உள்ள கண்டரோட்டை எனும் இடத்தில் கிடைத்த இரண்டாம் நூற்றாண்டை சேர்ந்த நாணயம். நாணயத்தின் ஒரு பக்கத்தில் தமிழ் பிரம்மியில் எழுதப்பட்ட 'உதிப்பான்' என்ற வார்த்தை இருக்க இன்னொரு பக்கம் ஸ்ரீவத்சா என்பது உள்ளது.

படம் - 3
13 - 17 AD யில் ஜாப்னாவை ஆண்டு வந்த நல்லூர் மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள். ஒருபுறத்தில் மன்னனின் தலையும், இன்னொரு பக்கத்தில் சிவபெருமானின் வாகனமான நந்திக்கு எதிரில் மயில் இருக்க , சேது என்ற வார்த்தை நந்திக்கு கீழே உள்ளது

படம் 6 இலங்கையில் முருகன் வழிபாடு தொல்பொருள் ஆராய்ச்சி.

ஆதரங்களை சமீப ஆய்வு முடிவுகள் நிலை நாட்டுகின்றன. மேலும் கி.மு. எந்நூறாம் ஆண்டுகளுக்கு முன்பே சைவ சமயம் இலங்கை மண்ணில் கோலோச்சியதை அங்கே நடந்த ஆராய்ச்சியில் கிடைத்த மண்பாண்டங்கள், கலைபொருட்கள், லிங்கம் போன்றவை நிலை நாட்டுகின்றது. இருப்பினும் மூன்றாம் நூற்றாண்டு புத்த மதம் தலைக்க துவங்கிய பின் இலங்கையின் மதச்சாற்பு கொள்கை முற்றிலும் மாறுபடத் துவங்கியது. இருப்பினும் தமிழ் நாட்டில் எப்போது முருக வழிபாடு துவங்கியதோ அப்போதே இலங்கையிலும் துவங்கியதை பூம்பரிப்பு, அனுராதபுரம், கந்தரோட்டை மற்றும் குணக்காரி போன்ற இடங்களில் கிடைத்த அகழ்வராய்ச்சி பொருட்களும் குறிக்கின்றன.

அன்று முதல் இன்று வரை இலங்கையில் முருக வழிபாட்டுக்கு ஒரு தலைநகராக விளங்குவது கதிர்காமம். அருணகிரிநாதர் திருப்புகழிலும், பாலதேவராய சுவாமிகளின் கந்தர் சஷ்டி கவசத்திலும் கதிர்காமத்தில் உரையும் கதிர்வேல் முருகன் சிறப்பிக்கபடுகிறார்.

முருக பக்தி மதங்களையும் கடந்து நிற்பதை இலங்கை கதிர்காமத்தில் பார்க்கலாம். இந்துக்களை தவிர பௌத்த மதத்தவர்களும், இஸ்லாமியர்களும், வேடுவ குலத்தவர்களும் கதிர்காமம முருக வழிபாட்டில் கலந்துக் கொள்வதை இன்றும் கதிர்காமத்தில் காணலாம். இது இலங்கை மண்ணில் மதங்களையும் கடந்து புராதனமாக முருகனை வழிபட்டு வந்த இலங்கை மக்களின் பண்பாட்டு முதிர்ச்சி என்றே சொல்லலாம்.

(தொடரும்)

ஆதி சங்கரரின் சுப்ரமணிய புஜங்கம்

தமிழ் மொழியாக்கம் (பகுதி 3)

முனைவர் ரெ.சந்திரமோகன்,
முதல்வர்,
முனைவர் வ.மீனாட்சி, தமிழ்த்துறைப் பேராசிரியர், நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி

இந்து மதத்தின் ஆறு வகை சமயங்களையும் ஒருங்கிணைக்க அரும்பாடுபட்டவர் ஆதிசங்கரர். ஆதிசங்கரர் சைவமா? வைணவமா? என்று அவரையே பாதியாக்கிப் பார்த்தனர் நம் மக்கள். 'அத்துவிதம்' என்ற சித்தாந்தத்தை முன்னறுத்தி பாரதம் முழுதும் பயணித்த ஆதிசங்கரர் கணக்கற்ற நூல்களுக்கு விரிவுரையெழுதி உள்ளார். பண்டிதரும் பாமரரும் அவரவரது பக்குவத்திற்கு இணங்க புரிந்து மேன்மையுறும் வழியைக் கண்டவர் ஆதிசங்கரர். அவரது எண்ணற்ற பாஷ்யங்கள் சுமார் ஆயிரம் ஆண்டுகளாக அறுவகை சமயத்தினரையும் ஒருங்கிணைகிறது என்றால் மிகையாகாது. கனகதாரா ஸ்தோத்ரம், பஜகோவிந்தம் போன்றவை மிகப் பிரபலமானவை. அவரது சுப்பிரமணிய புஜங்கப் பாடல்கள் மிகச் சிறப்புப் பெற்றவை. பாம்பு வளைந்து வளைந்து செல்லும் வடிவில் அமைக்கப்பட்டிருக்கும். இந்நூல் திருச்செந்தூர் முருகன் மீது வடமொழியில் பாடப்பெற்றது. இது மிக எளிமையான நிலையில் அரிதான பொருள்கள் அமைந்ததாகும்.

இதனைப் பாராயணம் செய்தால் நல்ல மனைவி, பிள்ளைகள், நீண்ட ஆயுள் முதலியவை கிடைக்கும். இதுவே நம்மை முருகப் பெருமான் திருவடியில் சேர்க்கும். இதில் முருகனின் அடி முதல் முடி வரை வருணனை இடம் பெற்றுள்ளது. மேலும் சுப்பிரமணிய உபாசனை, நோய் நீக்கும் மந்திரம், ஆறெழுத்து மந்திரத்தின் பெருமை, விபூதி விழுச்செல்வச் சிறப்பு, சக்திவேலின் சிறப்பு என்று பல செய்திகள் இடம்பெற்றுள்ளன. வடமொழியில் உள்ள 33 சுலோகங்கள் தமிழில் மொழியாக்கம் செய்து இங்குப் பகுதி பகுதியாக வழங்கப்படுகின்றன.

சுப்ரமணிய புஜங்கம்

25. முருகனின் திருநீறு மகிமை

கந்தன் நீறு சுமந்திட்ட பன்னீர் இலையின் காட்சியே
வந்த நோய்கள் அத்தனையும் தீர்ப்பது காட்சியின் மாட்சியே

வரும் நோய் வயிற்றுவலி தொழு நோயா!
காசநோயா வலிப்பு நல்கும் புதுநோயா!
சீதமுமா ரோகமுமா அதைத் தீர்த்திடும் உந்தன் திருநீறே!

26. புலன்களின் கடமை

எந்தன் கண்கள் காணுவதோ முருகா உந்தன் தரிசனமே
எந்தன் காதுகள் கேட்பதுவோ கந்தபுராணக் கதைகளையே
வாயோ என்றும் ஒதிடுமே சரவணபவ என்னும் மந்திரமே
தேயும் புலன்கள் மீதினிலே உந்தன் ஆட்சி தொடரட்டுமே!

27.அனைவர்க்கும் கருனை செய்தல்

உனக்கு நிகராய் தெய்வமில்லை முருகா நீயே என் தெய்வம்
உன்னையே நினையார் யாருமில்லை ஊரே உன்னைத் தேடுதய்யா
முனிவர் முனைவர் தேவருடன் மாந்தர் குலமும் சேர்ந்ததையா
கனிவுடன் அருளும் கருணை நீயே! கதிர் வேலா செந்தில் ஆண்டவனே!

28. எல்லோர்க்கும் குல தெய்வம் ஆறுமுகனே

திருச்செந்தூர் உறையும் செந்தில் வேலா திருவே நீயே எம்குலதெய்வம்

திக்கற்றோர் குலத்தின் தெய்வம் நீ எம்மக்கள் மறவா மனமருள்வாய்

எத்தனை பிறவி எடுத்தாலும் அத்தனையிலும் வேணும் உன்துணையே

பக்தனை என்றும் காத்திடுவாய் சரணம் சரணம் முருகய்யா!

29. சக்திவேலின் சிறப்பு

எந்தன் உடம்பில் குடியிருக்கும் நுண்ணுயிர் பலதரும் பல நோய்கள்

அந்த நோய்கள் அத்தனையும் ஒன்றாய் தீர்த்திடும் உன்வேலே!

உன்தாய் தந்த வேலுடனே ஸ்ரீ காக்க நீயும் வருவாயே!

உடனே வருவாய் காப்பாய் நீ உன்னதவேலா உமையின் மைந்தா!

30. உலகிற்குத் தந்தையே எங்கள் பிழைகளைப் பொறு

தங்கள் மகவின் பிழை பொறுத்தல் தந்தை தாயின் கடனன்றோ!

எங்கள் பிழைகள் பொறுத்திடுதல் தந்தை உந்தன் கடனன்றோ!

என்றும் எங்கள் பிழைபொறுத்து வினைநீக்கி அபயம் தந்து காப்பாயே

பரமசிவனின் பாலகனே! பார்வதி மைந்தா உனை வேண்டுவனே!

31. செந்திலாண்டவர் ஆராதனை

வேத மயிலே போற்றி! சக்தி தரும் வேலே போற்றி!

நாதனின் சேவல் போற்றி! வாகனமாம் செம்மறிஆடு போற்றி!

திருச்செந்தூர் நிறைந்த ஓயா அலை கடல் போற்றி! போற்றி!

திருச்செந்தூர் திருத்தலமே போற்றி! போற்றி செந்திலாண்டவனே! போற்றி! போற்றி!

32. ஆறுமுகத்தின் சாமர்த்தியம்

ஆறு முகத்தின் அருமைதனை கூறிட வார்த்தை எமக்கில்லை

ஆறுதல் நமக்குத் தருவதுடன் நாடும் பரமுத்தி தந்திடுமே!

ஆனந்தம் கோடி தருவதற்கே சோதியாய் வருமே திருமுகமே!

அன்புடன் உரைத்த சொல்மாலை ஏற்றிடு பரமனின் பாலகனே!

33.கடைக்காப்பு

எளியேன் பாடிய இப்பாடல்களை வேண்டி ஓதிடும் யாவர்க்கும்

எல்லா வளமும் என்றும் கிட்டும் என்றே உறுதி சொல்லிடுவேன்

எண்ணில் அடங்கா வரத்துடனே நீளாயுள் நிறைசெல்வம் நல்கிடுமே!

கண்போல் அன்புடை மனைவி மக்கள் கந்தன்; அருளால் அமைதல்; திண்ணம்!

(முற்றும்)

பண்டெழுவர் தவத்துறை

பகுதி-1

இரா. கலைக்கோவன்,
இயக்குநர்,
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
வரலாற்றாய்வு மையம்,
திருச்சிராப்பள்ளி

முன்னுரை

சிராப்பள்ளி ஜெயங்கொண்டம் சாலையில், சிராப்பள்ளியிலிருந்து ஏறத்தாழ 20 கி. மீ. தொலைவில் உள்ளது தவத்துறை. காவிரியின் வடகரைத் தலங்களுள் ஒன்றான இவ்வூர், தேவார மூவரின் பாடல் பெறாது போனாலும், அவர்களுள் ஒருவரான அப்பர் பெருமானின் அடைவுத் திருத்தாண்டகத்தில் இடம்பெற்றுள்ளது. ‘பண்டெழுவர் தவத்துறை’ (6: 71: 11) எனும் அப்பரின் குறிப்பே இவ்வூர் பற்றிக் கிடைக்கும் முதல் வரலாற்றுத் தரவாகப் பதிவாகி, இதன் பழைமையைப் பொ.கா. 6 ஆம் நூற்றாண்டாக உறுதிசெய்கிறது.

பழங்காலத்தே எழுவர் தவம் செய்த துறை என்று அப்பரால் அறிமுகப்படுத்தப்படும் இவ்வூரைப் பல்லவர் காலந்தொட்டே பிராமணர் குடியிருப்புகள் பிரமதேயங்களாய்ச் சூழ்ந்திருந்தபோதும், வெள்ளான் வகை ஊராகவே இவ்வூர் நிலைத்திருந்தமையை இங்கிருந்து படியெடுக்கப்பட்டிருக்கும் கல்வெட்டுகள் நிறுவுகின்றன. தவத்துறை மகாதேவர், பெருமானடிகள், ஈசுவர பட்டாரகர், உடையார், உடையநாயனார் என்றெல்லாம் காலத்திற்கேற்பப் பலவாறு பெயர் மாற்றம் பெற்ற இவ்வூர்க் கோயில் இறைவன் பொ. கா. 1596இல் அப்பரின் பண்டெழுவர் எனும் சுட்டலின் வடமொழியாக்கத்தில் சப்தரிஷீசுவரர் ஆனார்.

கோயில்

சிவகங்கை மீன் மண்டபம்

மிகப் பெரிய வளாகமாய்ப் பரவியுள்ள மேற்கு நோக்கிய இக்கோயிலின் முதல் வாயில் எளிமையானது. அதன் முன் நாற்கால் பந்தல் ஒன்று அமைய, இருபுறமும் பூசனைப் பொருட்கள், மாலைகள் விற்கும் கடைகள். வாயிலின் தென்புறத்துள்ள கல்வெட்டு, பொ.கா.1758 ஆவணி 14இல்,



முத்தரையருக்கும் தைலம்மைக்கும் மகவாய்ப் பிறந்த அஞ்சாமக் காத்தானைச் சுட்டுகிறது. தென்புறக் கல்வெட்டு அத்தூணை அளித்த சிதம்பரம் ரெட்டியாரை அறிமுகம் செய்கிறது. முத்தரையர் கல்வெட்டு, 'சிவகங்கை மீன் மண்டபம்' என்று சுட்டுவதற் கேற்ப, மணக்கால் சிதம்பரம், சிறுதையூரில் நிலம் விலைக்குப் பெற்றுக் கோயிலுக்குரிய தோப்பாக்கி, அதன் விளைவில் இரண்டு பங்கு தவத்துறை இறைவனுக்கும் ஒரு பங்கு மணக்கால் கயிலாசநாதருக்கும் என அறிவித்தமையைத் தெரிவிக்கிறது.

முதல் வாயிலுக்கும் கோபுரத்திற்கும் இடைப்பட்ட நடைக்கூரையைப் பெருநாகபந்தம் ஏந்திய செவ்வகப்பாதமும் எண் முக உடலும் சதுரத் தலைப்பும் கொண்ட தூண்கள் வெட்டுத் தரங்கப் போதிகைகள் கொண்டு தாங்குகின்றன. கூரையின் நடுப்பகுதியில் அதை உருவாக்கிய காத்தான் ஆசாரியின் மகன் பம்பையன் ஆசாரியின் பெயர் வெட்டப்பட்டுள்ளது. இந்த நடையின் தொடக்கத் தூண்களில் வடபுறமுள்ள கல்வெட்டு, இதை உருவாக்கியவராக வன்னியகுல முத்துராஜா முக்கா இந்நடைக்கூரையின் கிழக்குப் பரவலில் மூன்று இணை மீன் செதுக்கல்கள் காணப்படுகின்றன. தூண்களின் செவ்வகப் பாதங்களில் காணப்படும் கொடிக்கருக்குகள், இறைவடிவங்கள் நீங்கலான மனிதஉருவங்களுள் தென்புறத்ததை மண்டபம் எடுத்த அஞ்சாமக்காத்தானாகவும் வடபுறத்ததைச் சிதம்பர ரெட்டியாராகவும் கொள்ளலாம்.

சிவகங்கைத் திருக்குளம்

இந்நடையின் இடைப்பகுதியில் காணப்படும் தென்புற வாயில்களுள் ஒன்று சிவகங்கைக் குளத்திற்கும் மற்றொன்று நந்தவனத்திற்கும் வழிவிடுகின்றன. குளப்படித்துறை மண்டபக் கிழக்குச்சுவரில் கண்டறியப்பட்ட கல்வெட்டுகள், சீர்குலைந் திருந்த இந்தக் குளத்தைத் திருச்சிராப்பள்ளி வாணியநகரத்தாரில் மாளிகை உடையான் நாயகப்பிள்ளை பொ. கா. 1548இல் சீரமைத்துத்

திருப்பணி செய்ததாகக் குறிக்கிறது. நந்தவனத்தில் ஆலமர்அண்ணல், பைரவர், பிள்ளையார் முதலிய கோயிலின் சிதைந்த பழஞ் சிற்பங்கள் காணப்படுகின்றன.

வசந்த மண்டபம்

நடையின் வடவாயில் வசந்தமண்டபத்திற்கும் அதன் மேற்கிலுள்ள நிருவாக அலுவலகத்திற்கும் வழிவிடுகிறது. 16 முச்சதுர, இருகட்டுத் தூண்கள் நான்கு வரிசைகளாய் நின்று பல்வேறு போதிகைகள் துணையுடன் கூரைதாங்கும் கற்பந்தலே வசந்தமண்டபம் என்றழைக்கப்படுகிறது. அதன் தென்புறத் தூண்கள் இரண்டிலுள்ள கல்வெட்டுகள் அவற்றை இப்பகுதியிலிருந்து அழிந்த அமரசுந்தரநாயனார் கோயிலின் நூற்றுக்கால் மண்டபத் தூண்களாக அடையாளப்படுத்த, சில போதிகைகளில் சிம்மத்தின் மீதான வீரர்களும் ஆடல் காரிகை ஒருவரும் இடக்கையில் வீணை பிடித்தவாறு வலக்கையால் சங்கொலிக்கும் இசைக்கலைஞரும் சிற்பங்களாகியுள்ளனர்.

கோபுரம்

கிழக்கில் ஐந்துநிலைக் கோபுரம் சுதையுருவங்களுடன் வெளிச்சுற்றுக்கான வாயிலாய்க் கபோதபந்தத் துணைத்தளமும்

பாதபந்தத் தாங்குதளமும் வேதிகைத்தொகுதியும் உறுப்பு வேறுபாடற்றநான்முக அரைத்தூண்கள் தழுவும் சுவரும் கூரையுறுப்புகளும் கொண்ட ஆதிதளத்துடன் நிமிர்ந்து நிற்கிறது. சாலைப்பத்திகள் பிதுக்கமாய் உள்ள இதன் ஆரச் சுவர்ப்பத்திகளில் கோட்டப்பஞ்சரங்கள்.

கருங்கல்லால் ஆன ஆதிதளத்தின் மீது எழும் மேற்றளங்கள் நான்கும் கிரீவம், சிகரம் உட்படச் செங்கற் பணிகளே. அனைத்துத் தள ஆரஉறுப்புகளும் சுதையுருவங்கள் பெற்றுள்ளன. அவற்றுள் தென்புற உமாதட்சிணாமூர்த்தி குறிப்பிடத்தக்கவர். அடியவர்கட்கு அய்யன் உரைக்கும் ஆகமங்களைக் கேட்க விரும்பினாற் போல் அவரது இடத்தொடையில் அம்மை

அமர்ந்துள்ளார். கோபுரத்தின் உட்புறத்தே சோழர் காலச் சிற்பங்களாக வடசுவர்க் கோட்டத்தில் ஊர்த்வஜாநுப் பிள்ளையாரும் தென்சுவர்க் கோட்டத்தில் சூரியனும் உள்ளனர். சுவர்களில் இருபுறத்துமுள்ள மூன்று கல்வெட்டுகளுமே புதியன.

வெளிச்சுற்று

இறைவன், இறைவித் திருமுன்களை உள்ளடக்கி அமைந்துள்ள வெளிச்சுற்றின் வடபுறத்தே, மேற்கில், துணைத்தளத்தின் மீதமர்ந்த உயரமான மேடையும் கிழக்கில் நாற்கால் கற்பந்தலும் அதற்குச் சற்றுத் தள்ளி முன்றிலோடு யாகசாலையும் உள்ளன. தென்புறத்தே, கிழக்கில் பாதபந்தத் தாங்குதளத்தின் மீதமைந்த மண்டபமும் அதையடுத்து அறைகளாய்த் தடுக்கப்பட்ட சுற்றுமாளிகையும் அமைய, வெளிச்சுற்றின் தென்மேற்கில் நெடுந் தூண்கள் கூரை தாங்கும் நடையும் அதன் எதிரே இறைவி பெருந்திருவாட்டியின் கிழக்கு நோக்கிய திருமுன்னும் உள்ளன. இச்சுற்றின் பல பகுதிகளில் துண்டுக் கல்வெட்டுகளைக் காண முடிகிறது.

ஆடவல்லான் மண்டபம்

வெளிச்சுற்றின் வடமேற்கில் துணைத்தளத்தின் மீதுள்ள மேடை ஆடவல்லான் மண்டபம் என்றழைக்கப்படுகிறது. ஐந்து படிகள் கொண்ட அதன் வடசுவரில் ஓவியக்காட்சியாய் ஆடவல்லான், உமை, பிள்ளையார். இப்பகுதியின் தூணொன்றில் மராத்திய ஆடையமைப்புடன் காணப்படும் ஆடவர் இந்தப் பகுதியைக் கட்டமைத்தவராகலாம். மேடையிலுள்ள இரு பெரும் பாவைவிளக்குகளுள் வலப்புறம் உள்ளது பொ. கா. 1838 பங்குனித் திங்களன்று தரப்பட்டது என்பதை அவ்விளக்கின் பாடல் வடிவிலான எழுத்துப்பொறிப்பு உணர்த்துகிறது. இடப்புறமுள்ள விளக்கு வேலாயுதம்பேட்டைச் செட்டியார் ஒருவரின் துணைவியார் செவந்தியம்மாள், பெருந்திருவாட்டி அம்மனுக்குக் கர ஆண்டு (1891) ஆவணித் திங்கள் 13ஆம் நாள் தந்ததாகும்.

முச்சதுர இருகட்டுத் தூண்கள் வெட்டுத் தரங்கப் போதிகைகளுடன் உத்திரம், வாஜனம், வலபி தாங்கும் இம்மண்டபத்தில் ஓவியக்காட்சி உள்ள பகுதியைத் தனித்துக் காட்டும் வகையில் அங்கு மட்டும் ஒட்டுத்தூண்கள் நான்கு நிறுவப்பட்டுள்ளன. தனியறையாக்கப்பட்டுள்ள மண்டபத்தின் கிழக்கு விரிவுத் தூண்கள் மூன்றிலிருந்து கண்டறியப்பட்ட புதிய கல்வெட்டுகள் அவற்றை அமரசுந்தரநாயனார் கோயிலின் வள்ளுவப்பாடி நாட்டான் நூற்றுக்கால் மண்டபத் தூண்களாகக் காட்டுகின்றன. உத்திரத்தில் 18ஆம்

நூற்றாண்டினவாகக் கொள்ளத்தக்க சிற்பத்தொகுதிகளைக் காணமுடிகிறது. பாலுணர்வுச் சிற்பங்களும் வீரர் ஒருவரை யானை காலால் இடறும் சிற்பமும் மகப்பேறு சிற்பமும் குறிப்பிடத்தக்கன.

நாற்கால் கற்பந்தல், யாகசாலை, மடைப்பள்ளி

வெளிச்சுற்றின் வடகிழக்கிலுள்ள நாற்கால் கற்பந்தல் தூண்கள் ஆடவல்லான் மண்டபத் தூண்களை ஒத்துள்ளன. அவற்றின் சதுரங்களில் ஆனந்ததாண்டவர், நடமிடும் காளி, இரண்டு கைகளுள் ஒன்றில் உருள்பெருந்தடி ஏந்திய அம்மையப்பர், பிள்ளையார் முதலிய பிற்காலச் சிற்பங்கள். பந்தல் தரையின் தென்பகுதியில் உள்ள பாவுக்கற்களைச் சிராப்பள்ளி கோட்டைப்பகுதியில் குடியிருந்த தாசி கோதையின் மகள் குட்டி தந்ததாக இங்குக் கண்டறியப்பட்ட கல்வெட்டுக் குறிக்கிறது.10 வடகிழக்கு மூலையில் மதிலொட்டியுள்ள யாகசாலை முன்றிலின் இடைத்தூண்கள் இரண்டும் பழைமையானவை என்பதை அவற்றின் சதுரங்களிலுள்ள சிற்பங்கள் நிறுவுகின்றன.

தற்போது மடைப்பள்ளியாகப் பயன்படும் தென்கிழக்கு மண்டபத் திலிருந்து புதிய கல்வெட்டொன்றும் பல துண்டுக் கல்வெட்டுகளும் படியெடுக்கப்பட்டுள்ளன. புதிய கல்வெட்டு, துளாரைச் சேர்ந்த மாணிக்கச்சோதி சூரியதேவன் எடுத்த திருமண்டபமாக இதை அறிமுகப்படுத்துகிறது. சுற்றின் உட்சுவர்த் தாமரைவரியில் தெற்கிலும் வடக்கிலும் முறையே ‘சோமஸ்தானம், சண்டஸ்தானம்’ எனும் கிரந்தப் பொறிப்புகள் உள்ளன.

சுற்றுமாளிகையும் நடையும்

மடைப்பள்ளியை அடுத்துத் தெற்கு மதிலையொட்டி துணைத்தளத்தின் மீது எழும் சுற்றுமாளிகை வாகனங்கள், பரிகலன்கள், பிறபொருட்கள் வைக்க ஏதுவாகப் பல அறைகளாகத் தடுக்கப்பட்டுள்ளது. இங்கிருந்தும் கல்வெட்டுச் சிதறல்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. சுற்றின் தென்மேற்கில் வெயில், மழைத் துன்பமின்றி அம்மன் திருமுன் அடைய வாய்ப்பாக நெடுந்தூண்கள் தாங்கும் கூரை பெற்ற நடை உள்ளது. மேலும் கீழும் சதுரம், இடையில் செவ்வகம், அதன் மேலான இந்திரகாந்த உடல் என அமைந்திருக்கும் இத்தூண்களின் மேலுள்ள போதிகைகளின் மதலைகள் உத்திரம் தாங்க, பூமொட்டு நாணுதல்கள் தாழ்ந்துள்ளன. உத்திரத்திற்கு மேல் வாஜனமும் வலபியும் கூரை தாங்குகின்றன. இந்திரகாந்த உடலின் மேல், கீழ்ப்பகுதிகளை மாவிலை அலங்கரிப்புத் தழுவ, தூண் செவ்வகங்களின் சிற்பங்களுள் சில

பாலியல் காட்சிகளாக உள்ளன. அம்மன் திருமுன் முன்பாகக் கொடிமரம், நந்தி, பலித்தளம் நிறுவப்பட்டுள்ளன. சுற்றின் இப்பகுதியில்தான் உள்சுற்றுப் புறச்சுவரின் கீழ்ப்புறத்தே, 'அளவுகோல்' என்ற கல்வெட்டுப் பொறிப்புடன் வெட்டப்பட்டிருக்கும் 3.47 மீ. நீளப் பிற்சோழர் கால நிலமளந்த கோல் கண்டறியப்பட்டது.

பெருந்திருவாட்டித் திருமுன்

இறையகம், மண்டபங்கள், சுற்று என அமைந்துள்ள அம்மன் வளாகம் கிழக்கிலும் வடக்கிலும் வாயில்கள் பெற்றுள்ளது. வடக்கு வாயிற்படிகளைத் தழுவியுள்ள பிடிச்சுவர் வேழயாளித் தலைப்புப் பெற, வாயில் மேலுள்ள உத்திரத்தில் இருபுறமும் கல்வெட்டுச் சிதறல்கள். சுற்றின் முன்விரிவில் வடபுறத்துள்ள இரண்டு திருமுன்களும் வெறுமையாக உள்ளன. சுதையாலான யானைத்திருமகளை முகப்பு அலங்கரிப்பாகப் பெற்றுள்ள இவற்றின் வாயில்களை மூன்று காவற்பெண்டுகள் காக்கின்றனர். முச்சதுர, இருகட்டுத் தூண்கள் போதிகைகளின் மதலைகளால் கூரை தாங்கும் இவ்விரிவின் புறப்பகுதி பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, தூண்களற்ற சுவர், கூரையுறுப்புகள் பெற்றுள்ளது. ஜகதி, குமுதம் இவற்றின் மேற்புறத்தைத் தழுவியுள்ள தாமரைவரிகள் மேனோக்கு வகையின. சுவரின் வடக்கிலும் கிழக்கிலும் சாளரங்கள். கபோதத்தில் ஆழமற்ற கூடுவளைவுகள்.

சுற்றின் உட்புறத்தே தெற்கிலும் மேற்கிலும் வடக்கிலும் விரியும் மாளிகைப்பத்திகள், துணைத்தளத்தின் மீது முச்சதுர, இருகட்டுத் தூண்கள் பூமொட்டுப் போதிகை கொண்டு தாங்கும் கூரையுடன் அமைந்துள்ளன. கூரையின் வெளிநீட்டல் கபோதமாக அமைய, தூண்களின் கீழ்ச்சதுரங்கள் நாகபந்தமும் நடுச் சதுரங்கள் தாமரைப்பதக்கமும் கட்டுகளின் இடைப்பகுதி பட்டைகளும் கொண்டுள்ளன.

விமானம், முக, பெருமண்டபங்கள் என அமைந்துள்ள இறைவி கோயிலின் முதலிரு கட்டுமானங்கள் பிற்சோழர் காலத்திலும் பெருமண்டபம் சற்றுப் பிற்பட்ட காலத்திலும் கட்டப்பட்டுள்ளன. முகமண்டபத்தின் வடபுறத்துள்ள பின்னாளைய திருமுன்னில் தெற்குப் பார்வையாக வலக்கையில் நீலோத்பலம் ஏந்தி, இடக்கையை முழங்காலருகே இருத்திச் சண்டேசுவரி சுகாசனத்தில் காட்சிதருகிறார்.

(தொடரும்)

கோவிலூர் ஆதீன வெளியீடுகள் கோவிலூர் புதையல்கள் - 14

திருப்பூவணம் காசிகாநந்த ஞானாசாரிய சுவாமிகள் இயற்றிய மகாத்ம சரிதாமிருதம்

- நூல் அறிமுகம்

- கு. அன்பு மெய்யப்பன்,
உதவிப் பேராசிரியர்,
இராமசாமி தமிழ்க் கல்லூரி,
காரைக்குடி - 3.

கோவிலூர் மடத்தின் கிளை மடமான திருப்பூவணம் வேதாந்த மடத்தை இயற்றிய காசிகாநந்த ஞானாசாரிய சுவாமிகளால் இயற்றப்பட்டது இந்நூல். மொத்தம் 446 பக்கங்களைக் கொண்டுள்ளத பெரிய நூல். நாற்பது மகாத்மாக்களாகிய ஞானவான்களின் சரிதங்களைத் தொகுத்துத் தரும் நூலாக இது விளங்குகிறது. . மதுரை ஸ்.சுப்பு ராயலு நாயுடு பிரசில் 1969 இல் அச்சிடப்பட்டுள்ளது. 1930 இல் எழுதப்பட்டு, 1969இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலுக்கு முன்னுரை ஒன்றை சுவாமிகள் 1930 இல் எழுதியுள்ளார்கள். அதில், “மோட்சமடைந்த பல பெரியோர்களின் சரித்ரங்களைத் தெரிந்த மட்டும் எழுதி, இனி வரும் அதிகாரிகள் மோட்சம் அடைந்து சுகியாய் இருக்கும் பொருட்டு, சங்கராச்சாரியார் முதல் சிவாநந்த சுவாமிகள் வரை நாற்பது சரித்திரம் எழுதி வெளியிட்டு இருக்கிறோம்”

இதில் பல பெரியோர்கள் சரித்திரம் பல விதமான இருப்பதால்,

அவரவர்களும் தங்களுக்கு தேவையான பெரியாரின் வரலாற்றை படித்து , பயிற்சி பெற்று, அருள் பெற வேண்டுமென்று திருக்களர் ஆண்டவரான சீர் வளர் சீர் வீரசேகர ஞானதேசிகரின் திருவடிகளை பன்முறை வாழ்த்தி வணங்கி கூறுகின்றோம்.

இந்த சரித்திரம் எழுதி நாற்பது வருஷங்களாகியும், இப்போதுதான் அச்சு வாகனமேறி வெளிவருகின்றது என்பதை யாவரும் உணரவேண்டும்" என்று அம்முன்னுரையில் குறிப்பிடுகிறார். ஆக, 1930 இல் எழுதப்பட்ட இந்நூல் 1969இல் பதிப்பிக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

நூல் அமைப்பு

நூலின் தொடக்கமாக காசிகாநந்த ஞானாசாரியார் இயற்றிய 24 தோத்திரங்கள் அமைந்துள்ளன. அடுத்ததாக, சில புகைப்படங்கள் அமைந்துள்ளன.

1. காசிகாநந்த ஞானாசாரியா சுவாமிகள்.
2. ஸ்ரீ தத்துவராய சுவாமிகள்.
3. ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியார்.
4. ஸ்ரீ ல ஸ்ரீ தட்சிணா மூர்த்தி சுவாமிகள்.
5. கோவிலூரின் முதல் மூன்று பீடாதிபதிகள்.
6. கோவிலூர் அண்ணாமலை ஞான தேசிகர்.
7. ஏகாம்பரக் குப்பம் சிவாநந்த சுவாமிகள்.

ஆகியோரின் படங்கள் அலங்கரிக்கின்றன. கிடைக்கின்ற புகைப்படங்களில் காசிகாநந்த ஞானாசாரியாரின் புகைப்படம் இந்நூலிலேயே தெளிவாகக் காணக் கிடைக்கிறது.

அடுத்து ஒரு அட்டவணை காணப்படுகிறது. 58 பெரியார்களின் ஊர், பெயர், மறைந்த நாள், நட்சத்திரம், சாதி ஆகியவற்றை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இப்பட்டியல் ஓர் வரலாற்றுப் பொக்கிஷம் என்றால் மிகை யில்லை. ஆதி சங்கராச்சாரியார் தொடங்கி ஏகாம்பரக் குப்பம் சிவாநந்த சுவாமிகள் வரை 40 பெரியார்களின் வாழ்க்கை வரலாற்றை முழுவதுமான இந்நூலில் பதிவு செய்துள்ளார்.

1. ஆதி சங்கராச்சாரியார்
2. சுரேசுவர ஆசாரியார்
3. தோடக ஆசாரியர்
4. வித்யாரண்ய சுவாமிகள்
5. சதாசிவப் பிரம்மம்

இவர்கள் தவிர்த்து குறிப்பிட்ட சிலர் மட்டுமே கோவிலூர்த் தொடர்பு இல்லாதவர்கள். 30க்கும் மேற்பட்டவர்கள் கோவிலூரோடு தொடர்பு கொண்டவர்களே.

இந்நூலின் மூலம் கோவிலூர்த் தொடர்புடைய பலரது வாழ்க்கை வரலாற்றை அறிய முடிகிறது. வேறு எங்கும் கிடைக்காத தவல்களை சுவாமிகள் இந்நூலில் பதிவு செய்துள்ளார்.

முத்துராமலிங்க ஆண்டவரின் சிறு வயதுச் செயல்பாடுகள் பலவற்றை இந்நூலில் குறிப்பிடுகிறார். மிக நுணுக்கமாக ஆண்டவரின் வரலாற்றை விவரிப்பது சிறப்பானது. பல நூல்களில் இல்லாத, கிடைக்காத செய்திகள் இந்நூலில் கிடைக்கின்றன.

கோவிலூரின் வரலாற்றை முழுவதுமாக அறிய விளைபவர்கள் இந்நூலை முழுமையாகப் படித்தால் பயன் அடையலாம்.

மகாத்ம சரிதாமிருதம்

நூலின் இணைய இணைப்பு

நல்வழி பாடல்கள்

சிவாய நம என்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை – உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்

விளக்கம்:

சிவாய நம என்று கூறும் ஐந்தெழுத்து மந்திரமே விதியை வெல்லும் உபாயமாகும். அவர்களுக்கு அபாயம் ஒரு நாளும் இல்லை. இதைத் தவிர நாம் மதி / அறிவு என்று நினைக்கும் அனைத்து விஷயங்களும் விதியின் வழியில் தான் செல்லும்

காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி பாடல் நலம்

காண்பவர்முவர்

- வாகீச கலாநிதி
கி.வா. ஜகந்நாதன்

ஏதேனும் ஒருபொருளைப் பலபேர் காண்கிறார்கள். அவர் காணும் பொருள் ஒன்றே ஆயினும், அவரவர்களுடைய பார்வையில் வெவ்வேறான விளைவு உண்டாகும். பச்சைப் பசேலென்று இலை அடர்ந்த கொடிக்கு நடுவே வெள்ளை வெளேரென்ற மல்லிகைப் பூக்கொத்துக் கொத்தாகப் பூத்துக் குலுங்குகிறது. அதை ஓர் ஓவியன் பார்க்கிறான். அதன் அழகைக் கண்டு சுவைக்கிறான். தன்னுடைய தூரிகையினால் அதைப் போலவே வண்ணப்படம் ஒன்றைத் தீட்ட எண்ணுகிறான். அவனுடைய பார்வை ஓவியக்காரன் பார்வை.

வேறு ஒருவன் அந்தக் கொடியைப் பார்க்கிறான். அவன் தோட்டக்காரன். வளமாக வளர்ந்துள்ள கொடியைக் கண்டு மண்வாசனையும் அதை வளர்ப்பவருடைய முயற்சியையும் பாராட்டுகிறான். அவனுடைய பார்வை தோட்டக்காரன் பார்வை.

புதிதாக மணம் செய்து கொண்ட இளைஞன் அந்தக் கொடியைப் பார்க்கிறான். பூத்திருக்கும் பூங்கொத்தைப் பார்க்கிறான். உடனே அவனுடைய காதலியின்

கருங்கூந்தல் நினைவுக்கு வருகிறது. இந்தப் பூங்கொத்து அவள் தலையில் இருந்தால்ஷெ ? அதைப் பறித்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் முந்துகிறது. அவன் பார்வை காதலன் பார்வை.

ஒரு பக்தன் மல்லிகைக் கொடியைப் பார்க்கிறான். இறைவனுடைய திருவடியில் மலரைப் பறித்து அருச்சனை செய்ய வேண்டுமென்ற எண்ண்ம் தோன்றுகிறது. வேறொருவன்அங்கேயே பறித்து மோந்து பார்க்க விரும்புகிறான். மலர் விற்கிறவன் மலரைப் பறித்து மாலைகட்டி விற்க நினைக்கிறான்.

ஒரு கவிஞன் அங்கே வருகிறான், மலர்க் கொடியை உற்றுக் கவனிக்கிறான். இலைகளின் பசுமையில் மனத்தைச் செருகுகிறான், கொடியின் நளினத்தில் ஈடுபடுகிறான். மலரின் அழகிலே எல்லாவற்றையும் மறந்து நின்றுவிடுகிறான். அந்த அழகநுபவமே அவனுக்கு யோகமாகி விடுகிறது.

இத்தனை பேரும் மல்லிகைக் கொடியைப் பார்த்தார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான எண்ணம் உண்டாகிறது. அந்தக் காட்சி அவரவர் உள்ளப்பாங்குக்கு ஏற்ற விளைவை எழுப்புகிறது.

இ றை வ னு டை ய தி ரு க் கே ா ல த் தை க் காண்கிறவர்களும் இப்படிப் பல வகையான உணர்வை அடைகிறார்கள். இறைவன் பொறிபுலன் கடந்து நின்றாலும் யாவரும் காணத் திருக்கோயில்களில் விக்கிரக வடிவில் எழுந்தருளியிருக்கிறான். அந்த உருவம் சிற்ப நலன் பொருந்தியதாக இருக்கிறது. கோயிலில் பூஜை செய்கிறவர்கள் அலங்காரம் செய்து காட்டுகிறார்கள். வண்ண வண்ண மலர்மாலைகள் புனைந்து அழகு செய்கிறார்கள். விழாக் காலங்களில் சிறப்பான அலங்காரங்களைச் செய்கிறார்கள். உற்சவ மூர்த்திக்கு ஹஸ்தம் பாதங்களைப் பொருத்தி ஆடை அணிகள் அணிந்து வெவ்வேறு கோலத்தில் காட்சியளிக்கும்படி செய்கிறார்கள். நாளுக்கு ஓர் அலங்காரம்; தினத்துக்கு ஒரு வாகனம். மேளதாளம், வாணவேடிக்கை, பஜனை,

வேதபாராயணம் - இவ்வளவு கோலாகலத்துடன் இறைவன் எழுந்தருளுகிறான். அப்போது க்ண்கொள்ளாத காட்சியாக இருச்கிறது. நெடுந்தூரத்தில் உள்ளவர்கள் எல்லாம் இந்த விழாக்காட்சியைத் தரிசிப்பதற்காக வந்து கூடுகிறார்கள்; இறைவனைத் தரிசித்து மகிழ்கிறார்கள்.

அப்படி உள்ள வடிவங்களைக் காண்கிறவர்கள் ஒரே மாதிரியாகப் பார்ப்பதில்லை. அவரவர்களுடைய இயல்புக்கு ஏற்றபடி பார்வை இருக்கிறது. அப்படிப் பார்க்கிறவர்களை ஒரு வகையில் மூன்று வேறு பிரிவினராகப் பிரித்துச் சொல்லலாம்.

ஆண்டவன் திருவீதி உலா வருகிறான். அமெரிக்க நாட்டிலிருந்து வந்தவன் அந்தக் காட்சியைப் பார்க்கிறான். மலர்மாலைகளும் அலங்காரங்களும் அழகாக இருக்கின்றன. அவற்றைக் கண்டு மகிழ்கிறான். இறைவனுடைய திருவுருவத்தைப் பார்க்கிறான். சிற்ப எழிலை வியக்கிறான் கையில் வைத்திருக்கும் காமிராவைத் தட்டிப் படமும் எடுத்துக் கொள்கிறான். அவன் கண்களுக்கு ஆண்டவன் அழகிய சிற்ப வடிவாகத் தெரிகிறான். அழகைச் சுவைக்கும் கண்களுக்கு அந்தக் கோலம் இன்பத்தை ஊட்டுகிறது.

அமெரிக்காக்காரன் என்ன? நம் நாட்டிலும் இப்படி வரும் இறைவன் கோலத்தைக் கண்டு, "நன்றாக அலங்காரம் செய்திருக்கிறார்களே!" என்று மதிப்புரை கூறுகிறவர்கள் பலர் உண்டு. இத்தனை மாலைகளை எங்கே வாங்கினர்கள்?" என்று ரசிக்கிறவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் யாவரும் கண்ணிற் கண்ட காட்சியைச் சுவைக்கிறவர்கள். கண்ணில் மட்டும் நிறுத்திப் பார்க்கிறவர்கள், சிறிது நேரம் இந்த அழகை நின்று பார்க்கிறவர்கள். இவ்வாறு பார்க்கிறவர்களுக்கும் மகிழ்ச்சி உண்டாகும்படி இறைவன் காட்சி தருகிறான்.

தொல்லுலகுக்கு
ஆதியாய் நின்ற அரன்,
காண்பார்க்கும் காணலாம்
தன்மையனே!

என்று இந்த வகையினரை நினைந்து பாடுகிறார் காரைக்கால் அம்மையார்.

மற்றொரு வகையினரைப்

பார்க்கலாம். அவர்களும் இறைவன் திருக்கோல அழகைக் கண்டு மகிழ்கிறார்கள். ஆனால் அவர்கள் பார்வையிலே ஆழம் இருக்கிறது. வெறும் வடிவத்தை மட்டும் அவர்கள் காண்பதில்லை. வெறும் கண் பார்வையோடு அவர்கள் நிற்பதில்லை. அவர்களுடைய பார்வையில் கருத்தும் கலக்கிறது. கண்ணும் கருத்தும் இணைந்து பார்க்கும் பார்வை அது. கண், வடிவத்தின் அழகிலே ஈடுபடும்போது கருத்து, "இவன் நம்மை ஆண்டருளும் இறைவன்" என்ற எண்ணத்தைக்கொள்கிறது; பார்வையில் ஓர் ஒட்டுறவும் இணைகிறது. அழகும் அந்த உறவுணர்ச்சியும் சேரும்போது அவர்கள் பார்ப்பதோடு நின்று விடுவதில்லை. "நம் இறைவன்" என்ற அன்புள்ளம் உந்துவதனால் கையெடுத்துக் கும்பிடுகிறார்கள்.

நாம் தெருவிலே போகும் போது எவ்வளவோ பேரைப் பார்க்கிறோம். அழகிய உருவம் உடைய ஒருவர் போகிறார். அவரைக் கண்டு வியப்போம். ஆனால் அவர் நம்முடைய நண்பராகவோ, நமக்குப் பழக்கமான பெரியவராகவோ, இருந்தால் கை எடுத்து அஞ்சலி செய்கிறோம். நமக்குத் தெரிந்தவர் என்பதை அந்த அஞ்சலி காட்டுகிறது. அந்த இருவரையும் வேறு ஒருவர் பார்த்தால் அவர்கள் ஒருவருக்கொருவர் பழக்கம் உள்ளவர் என்பதை அந்த அஞ் சலியினால் அறிந்து கொள்வார்.

அப்படியே இறைவனிடம் அன்புடையவர் அவனுடைய திருக்கோலத்தைக் கண்டால் கையெடுத்து அஞ்சலி செய்வார்கள். வெறும் அழகுக் கோலத்தைக் கண்டு அந்த அளவிலே நின்றவர்களுக்கு ஒரு வகையில் இன்பம் உண்டாகிறது. ஆனால் அன்பர்கள் கண்டால் அவர்களுக்கு உண்டாகும் இன்பம் அதைவிடப் பெரிது. முன்னாலே, கண்டவர் கண்களால் மட்டும் கண்டவர்கள். இவர்களோ கைதொழுது காண்பவர்கள். இவர்களுக்கும் இறைவன் காட்சி தருகிறான். அந்தக் காட்சியிலே இவர்கள் மனம் உருகுகிறார்கள்.

கைதொழுது காண்பார்க்கும் காணல் ஆம்.

இனி மூன்றாவது வகை யினர் வருகிறார்கள். அவர்கள் எப்படிக் காணுகிறார்கள்? முதலில் பார்த்தவர்கள்

கண் ஒன்றையே கொண்டு வடிவத்தைப் பார்த்தார்கள். அடுத்தபடி கண்டவர்கள் கண்ணோடு கருத்தையும் இணைத்து, எம் இறைவன் என்ற நினைவோடு கைதொழுது பார்த்தார்கள். மூன்றாம் நிலையில் இருப்பவர்களோ, கண்ணாலும் பார்த்தார்கள்; கருத்தோடும் பார்த்தார்கள். அவர்களுடைய உள்ளத்தில் இறைவன்பால் முறுகிய அன்பு இருக்கிறது; அவனுக்காக எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்துவிடும் காதலே இருக்கிறது. அவர்கள் காண்கிறார்கள். கண்ணோடும் கருத்தோடும் கண்டவர்கள் இப்போது கண்ணை மூடிக்கொள்கிறார்கள். கருத்து மட்டும் தொழிற்படுகிறது. சித்தத்தில் அவனைச் சிறைப்படுத்துகிறார்கள். சிந்தையில் காதலால் காண்கிறார்கள். அப்போது அவர்களுக்கு உண்டாகும் அநுபவம் எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது! அவர்களுடைய காதல்மயமான சிந்தையில் இறைவன் சோதிப் பிழம்பாகத் தோன்றுகின்றான். அவர்களுக்கு இப்போது எல்லாம் மறந்து போகின்றன. உண்முகக் காட்சியிலே ஈடுபட்டுப் போகிறார்கள். மாறிலா மகிழ்ச்சியில் மலர்ச்சி பெறுகிறார்கள். அவர்களுக்கு இறைவன் உள்ளே புகுந்து சிந்தையுள்ளே சோதியாய்த் தோன்றுகிறான்.

காதலால் காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே
தோன்றுமே.

கண்ணினால் மட்டும் காண்பவர்களுக்கு அழகு வடிவமாகத் தோன்றுகிறான் இறைவன். கண்ணோடும் கருத்தோடும் இறைவனாகக் காண்பவர்களுக்கு ஒட்டுறவை உணர்த்திக் கை தொழும்படி செய்து காட்சி அளிக்கிறான். காதலால் கண்ணாலும் கருத்தாலும் கண்டு பிறகு கண்ணை முடி உண்முகமாகப் பார்க்கிறவர்களுக்குச் சிந்தையுள்ளே சோதியாக நின்று இன்பம் பொழிகிறான்.

முதலில் காண்பவர்கள் அழகுணர்ச்சியால் மகிழ்ச்சி அடைகிறார்கள். அடுத்தபடி காண்பவர்கள் அன்புணர்ச்சியால் கைதொழுது இன்புறுகிறார்கள். மூன்றாமவர் காதலுணர்ச்சியால் உண்முக தரிசனம் பெற்று

ஆனந்தத்தில் ஆழ்கிறார்கள். இந்த மூன்று வகையான அநுபவங்களில் ஒன்றைவிட ஒன்று விஞ்சி நிற்கின்றது. இறைவன் பொதுவாகக் காட்சி அளித்தாலும் அவரவர்களுடைய பக்குவத்துக்கு ஏற்றபடி அநுபவம் அமைகிறது. மூன்று வகையான நிலையிலுள்ள மக்களுக்கு மூன்று வகையில் மகிழ்ச்சி விளைகிறது. ஒன்று பொதுவாக இருப்பது. மற்றொன்று காண்பவருக்கும் இறைவனுக்கும் உள்ள உறவினால் அமைவது. இறுதியில் உள்ளது எல்லாவற்றையும் மறந்து இறைவனேயே காணும் அநுபவத்தை உண்டாக்குவது.

இந்த மூன்று வகையிலும் இறைவன் காட்சி தருவதைக் காரைக்கால் அம்மையார் தெரிவிக்கிறார்.

காண்பார்க்கும் காணலாம்
தன்மையனே, கைதொழுது
காண்பார்க்கும் காணல் ஆம்,
காதலால்ஷெகாண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே
தோன்றுமே, தொல்உலகுக்கு
ஆதியாய் நின்ற அரன்.

முதல் நிலையினர் பொதுமக்கள். அடுத்த நிலையினர் பக்தர். கடைசியில் வருகிறவர் அநுபூதிமான். முதலில் காண்பவர் உலகத்தில் அழகுள்ள பல பொருள்களைப் பார்க்கிறதைப் போலப் பார்க்கிறார். இரண்டாமவர் மற்றப் பொருள்களைப் போலல்லாமல் தமக்கு இறைவன் என்ற உணர்வோடு மற்றவற்றை விலக்கித் தம்மையும் இறைவனையும் பார்க்கிறார். மூன்றாமவர் எல்லாவற்றையும் மறந்து தம்மையும் மறந்து அவன் மயமாக நின்றுவிடுகிறார்.

இறைவனை அழகிய வடிவமாகப் பார்த்துப் பழகி, பிறகு அவன் நம் இறைவன் என்ற ஒட்டுறவோடு பார்த்து வழிபட்டு, அப்பால் உண்முகமாகத் தியானித்து நின்றால் இன்ப அநுபவம் பெறலாம் என்பது கருத்து.

இது அற்புதத் திருவந்தாயில் பதினேழாவது பாட்டு.

நல்லன எல்லாம் தரும் சுந்தர காண்டம்

பிணிவீட்டு படலம் தொடர்ச்சி

பகுதி-13 தொடர்ச்சி

முனைவர் சரசுவதி இராமநாதன்,
பள்ளத்தூர்

'சுக்ரீவன் என்ன சொல்லியனுப்பினான்' எனக் கேட்ட இராவணனிடம் அனுமன், 'ஏற்ற அறிவுரைகள், நீதிபொருந்தியவை, அவற்றை உனக்குச் சொல்கிறேன். நீ உணர்ந்து நடப்பாயாக! உன் வாழ்க்கையை நீயே வீணகாக்கிக் கொண்டாய்! தீய செயல்கள் புரிந்து அழிவைத் தேடிக் கொள்கிறாய்! குற்றமற்ற கற்புடையவள் தீயினும் தூயவனுமான சீதையைத் துன்புறுத்தி உன் தவத்தின் பயனை அழித்துக் கொண்டாய்' பாவங்கள் புண்ணியப் பயனை அழித்துவிடுமே!

திறம் திறம்பிய காமச் செருக்கினால்
மறந்து, தம்தம் மதியின் மயங்கினார்,
இறந்து இறந்து, இழிந்து ஏறுவதே அலால்,
அறம் திறம்பினர், ஆர் உளர் ஆயினார்?"

பிறன்மனை நயந்து மதிமயங்கி அறம் தவறி நடப்பவர் அழிவர் என்பது தெரியாதா? அப்படி அழிந்தவர் பலர். ஊரார் நகைக்க, அடுத்தவன் மனைவியை நயந்து காமத்தால் உடல் வெந்து, தவிப்பவன் ஆண்மையுடையவனா? விரும்பாதப் பெண்ணிடம் கெஞ்சி, வசை வாங்கி வாழ்வதை விட மூக்கில்லாமல் வாழ்வது அழகு!

அறம் தவறியவனை, ஆயிரம் தலைகள் துணை வந்தாலும் காக்க முடியாது! சிவபெருமான் உன் கானத்தில் மயங்கித் தந்தவரம், அறம் தவறியதால் உன்னை விட்டு நீங்கும். ஞானிகள் விரும்பும் மேலான

அரக்கர்களைக் கொன்றது ஏன்? சொல்! என்றான். ”காட்டுவார் இன்மையால் கடி காவினை வாட்டினேன். என்னைக் கொல்ல வந்தோர்களை வீட்டினேன்” என்று அருமையாகப் பதில் தந்தான் அஞ்சனை மைந்தன்.

ஆத்திரம் மேலிட இக்குரங்கைக் கொல்லுங்கள் என ஆணை யிட்டான் தசமுகன். கொலையாளிகள் அனுமனை நெருங்க ‘நில்லுங்கள்’ என்றான் மேதாவியான வீடணன். தசகண்டனை இருகை கூப்பி வணங்கினான். உங்கள் கோபம் நீதிமுறைக்கு ஏற்றதன்று! வேதங்களில் வல்ல அரசே! தூது வந்தேன் என்றவனைக் கொல்லுதல் சரியா? மாதரை, தூதரை, அறிவுநலம் சான்றவர் கொல்வரோ? தூதனைக் கொன்றான் என்ற பழிக்கு ஆளாகப் போகிறாயா!

இராமனும் இலக்குவனும் கூட சூர்ப்பனகையாம் நம் தங்கையை மூக்கரிந்து, அங்கபங்கப்படுத்தி அனுப்பி வைத்தனரேயன்றிக்

சிறப்புக்களை உன் இழி செயலால் அழித்துக் கொள்வாயா? இராமன் அறவழிநடப்பவன். சீதையை அவனிடம் தந்து விடு என்று சூரியன் மகன், எம் அரசன் சொல்லியனுப்பினான் என்று அனுமன், நல்ல தூதனாக நயம் பட அறிவுநலம் நிறை சொற்களைச் சொன்னான்.

இராவணன் பெருஞ்சிரிப்புடன் குன்றில் வாழும் குரங்கு எனக்கு அறிவுரை சொல்கிறது. அது கிடக்க குரங்கு சுக்ரீவன் சொன்னதும், இராமனின் வெற்றியும் இருக்கட்டும்!

கொல்லவில்லையே! ஆகவே இந்த அனுமனைக் கொல்லாதே என்றான் வீடணன். உடனே இராவணன் அது சரி! இதன் வாலைச் சுட்டு, நம் நகரைச் சுற்றிவரச் செய்து வெளியே விரட்டுங்கள். இவன் போய் அந்தமானிடரிடம் நடந்தவற்றைச் சொல்லட்டும் என்றான். அரக்கர்கள் அனுமனிடம் வேகமாக வந்தனர்.

இந்திரசித்தன், "பிரம்மசாஸ்திரம் இருக்கும் உடலில் தீயிடுவது தவறு! அதைக் கழற்றிவிடுகிறேன். வேறு கயிறுகளால் கட்டிய பின் தீயை வைக்கலாம் என அயன்படையைக் கட்டவிழ்த்தான். பருத்த கயிறுகளால் அனுமனைக் கட்டி ஆரவாரத்துடன் அரக்கர் இழுத்தனர். ஊஞ்சல் கயிறு, தேர்வடங்கள், யானை குதிரைகளைக் கட்டியிருந்த கயிறுகள் அனைத்தையும் கொண்டு அனுமனைக் கட்டினர். அவர்களின் ஆத்திரம் அத்தகையது! பெருமைமிகு அனுமனும் பொறுமையாய் இருந்தான். வாலில் தீவைத்தால் அதை இலங்கைக்கே பிரசாதமாகத் தருவேன்; எரிப்பேன்" என நினைத்தான். அரக்கர்களோ அனுமனை இங்கும் அங்கும் இழுத்தனர். "கடி காவை, காவல் நகரை அழித்து அட்சகுமாரனைத் தேய்த்து, அரக்கர் பலரைக் கொன்ற குரங்கை இப்போது பாருங்கள்" எனக் கத்திச் சொல்லி அனைவரையும் அழைத்தனர். சில அரக்கிகள் சீதையிடம் இவற்றை எல்லாம் தெரிவிக்க அவளும் பெருமூச்சுவிட்டாள். விம்மினாள். அமர்ந்து அக்னி பகவானை வணங்கி,

"தாயே அனைய கருணையான் துணையை, ஏதும் தகைவு இல்லா

நாயே அனைய வல் அரக்கர் நலியக் கண்டால், நல்காயோ?

நீயே உலகுக்கு ஒரு சான்று; நிற்கே தெரியும் கற்பு; அதனில்

தூயேன் என்னின், தொழுகின்றேன், எரியே!அவனைச் சுடல்!"

"தாயே அனைய கருணையான் (அனுமனை), நாயே அனைய வல்லரக்கர்' நலிய (அரக்கர் துன்புறுத்தினால்), நீ நல்காயோ? உனக்குத் தெரியும் என் கற்பு! நான் தூயவன் என்றால் அனுமனைச் சுடாதே என்று வேண்டினாள். உடனே அக்கினிக் கடவுள் அஞ்சி நடுங்கித் தன் சூட்டைத் தணித்துக் கொள்ளலானான். அனுமன் உடம்பு திடீர் எனக் குளிர்ந்தது.

ஒரு பெண்ணின் கற்புத்திறன் நெருப்பை உண்டாக்கும் எனச் சிலப்பதிகாரம் கண்ணகியின் செயலால் காட்டிற்று. கற்புடைப் பெண்ணால் நெருப்பைக் குளிரச் செய்ய முடியும் என்று இராமகாதை சீதையின் செயலால் நிரூபித்தது.

கூட வெப்பம் குறைந்தது "இது சனகன் பாவை, இராமனின் தேவி, சீதையின் இலங்கையை எரிக்கப் பயன்படும் என்று கருதி வாலை நீட்டி இலங்கையில் தீ பரவச் செய்தான். இவன் திரிபுரங்களை எரித்த காலத்தே எழுந்த தீப்போல இலங்கை நொடியில் தீயால் அழிந்தது. அரக்கர் செய்த வேள்வி நெய்யால் வயிறு மந்தமா யிருந்த அக்கினி பகவான் இந்த நெருப்பால் மகிழ்ந்தான் தனக்கு உதவிய அனுமனை வாழ்த்தினான்.

(பிணிவீட்டுப்படலம்நிறைவு)

அதுமட்டுமா? நெருப்பைச் சுடவும் கற்பு நெருப்புக்கு இயலும் என்று அக்கினிப்பிரவேச நிகழ்ச்சியில் சீதை காட்டிவிட்டாளே!

'சுடாதே' என்று சீதை ஆணை யிட்டதும், அனுமன் வால் மட்டுமா குளிர்ந்தது. கடலில் உள்ள வடலைத்தீ குளிர்ச்சியானது. சிவபெருமான் கையிலேந்திய கனல் குளிர்ந்தது. யாக குண்டங்களில் அந்தணர் வளர்த்த வேள்வித்தீ சுடவில்லை. சிவபரஞ் சுடரின் நெற்றிக்கண் நெருப்பும், முனிவர்கள் வளர்த்த முத்தீயும் (ஆகவனீயம், காருகபத்தியம், தாட்சிணாகனி) சுடவில்லை. இடி கூட வெம்மை நீங்கிக் குளிர்ந்தது. சூரிய மண்டலமும் சூடில்லாமல் போனது இத்தனை சொல்வானேன்! நரகத்தில்

இலங்கை எரியூட்டு படலம் (64 பாடல்கள்)

கடிமனைகள் யாவும் கருகிய எச்சங்களாயின! அரக்கரும் அரக்கியரும் எந்தப் பக்கம் சென்று தப்பிக்கலாம் என அலைந்து, பேராளி எழுப்பினர். மயில் போன்ற மங்கையர், புகையில் சிக்கி, வாய்விட்டழுதனர். அவர்கள் தலைமுடி சிவப்பாக இருந்தது. தீக்கதிர் பரவியிருக்கிறதோ

எனத் தண்ணீரைத் தலையில் கொட்டிக் கொண்டனர்! வாமனனாக வந்து, மூவடி கேட்டுப் பேருரு எடுத்த திருமால் போல, நெருப்பும் புகையும் வானளவு எழுந்து பரவின! வெம்மை தாங்காமல் கடலில் விழப்போனார்கள் அரக்கரும், அரக்கியரும்! கடலில் நெருப்புப் பொறிகள் சிதறிநீர் வெப்பமாகவே, மீன்களும் துடித்து இறந்தன! சாபமொழிகள் விரைந்து பலன் தருவது போல, நெருப்பும் விரைந்து பரவியது. பொன்மயமான மனைகள் நெருப்பில் விரைவாக உருகின! மதுச்சாலையில் பரவிய நெருப்பு மதுவை முழுதும் குடித்ததது (மனத்தூய்மை இல்லாதவரிடம் சேர்ந்தால் நல்லவரும் கெட்டவர் ஆவாரே!).

இலங்கையைச் சூழ்ந்த கடல்நீர், உலைநீர் போலக் கொதிக்க ஆரம்பித்தது. அரக்கர் உடலில் பற்றிய தீயுடன் இங்கும் அங்கும் ஓடிநீரில் விழ முயன்றனர். அந்த நீரும் கொதித்துக் கொண்டிருந்ததால் கதறினர். விண்வரை தீப்பிழம்புகள் ஓங்கிப் பரவின! கம்பன் இங்கும் கற்பனைக் குதிரையைத் தட்டிவிடுகிறான். நெருப்புச் சுடர் சந்திரமண்டலம் வரை பரவியதால், அமுதம் சில துளிகள் சிந்த அதைப் பருகிய சில அரக்கர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல! கிளிகள் கூண்டுகளுடனே தீயில் வெந்தன! கண்ட அரக்கியர் கண்ணீர் சொரிந்தனர். காலாக்கினி எனும் யுக முடிவுத் தீ போல, இலங்கையை அன்று அனுமன் வாலில் வைக்கப்பட்ட தீ எரித்தது! மேகங்கள் கூட நீரின்றி அலைந்து திரிந்தன. குடும்பத்தோடு கடலில் போய் விழுந்தவர் அநேகர். செய்தியறிந்த இராவணன், 'இலங்கை இவ்வாறு நெருப்பில் வெந்தழியக் காரணம் என்ன? என்றான். குரங்கின் வாலில் வைத்த நெருப்பை வைத்து அது ஊரையே சுட்டது! என்றனர். அக்கினி தேவனைப் பிடித்திழுத்து வருக! என்றான் தசமுகன். சுற்றிவளைத்த அரக்கர்களை மரத்தால் அடித்துமாளச் செய்துவிட்டு, வாலைக் கடலில் நனைத்துக் கொண்டான். 'சீதை இருந்த சோலையுள் நெருப்புப் புகவில்லை. என்பதறிந்து மகிழ்ந்து சீதையைத் தரிசித்து, வணங்கி, விடைபெற்றுப் புறப்பட்டான். அக்னியும் மறைந்தான். நாமும் அனுமனுடன் இலங்கையிலிருந்து புறப்படுவோம்.

(தொடரும்)

அன்பர் பூசையில் அயர்வுறாத தம்பதிகள்

இளையான்குடி மாற நாயனார்

தேனம்மை இலக்குமணன்,
காரைக்குடி

தம் இல்லத்துக்கு வரும் உறவினர்களை வரவேற்று உபசரிப்பது உலக வழக்கம். ஆனால் தம் இல்லத்துக்கு வரும் சிவனடியார்களுக்கும் பூசை செய்வதில் அயர்வடையாத தம்பதியர் இருந்தார்கள். கடுமையான வறுமையில் உழன்ற போதிலும் இருப்பதைக் கொண்டு சிறப்பாக உணவு படைத்த அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.

இளையான்குடி என்றொரு ஊரில் உழவுத் தொழில் புரிந்து வந்தார் மாறன் என்பார். இவர் சிறந்த சிவபக்தர். இவர் மட்டுமல்ல இவரது மனைவியாரும் தன் பர்த்தாவுக்கேற்ற பத்தினி. எந்நேரமும் பஞ்சாட்சரத்தை உச்சரித்துக் கொண்டே இருப்பார்கள். தம் இல்லத்துக்கு வரும் சிவனடியாரை இருவருமே இன்சொற்கள் கூறி வரவேற்று உபசாரம் செய்து அறுசுவை விருந்து படைப்பார்கள்.

செய்யும் தொழிலில் வரும் பொருளை எல்லாம் அவர் சிவத்தொண்டுக்கே அர்ப்பணித்ததால் பெரும் செல்வம் சேர்ந்தது. இல்லத்துக்கு எழுந்தருளும் ஒவ்வொரு சிவனடியாரையும் தம்பதிகள் கரம் கூப்பி வரவேற்று ஆசனம் அளித்து அவர்கள் அகமும் முகமும் குளிரும் வண்ணம் விருந்து படைப்பார்கள். மகேசுவர பூசையும் மக்களுக்கு உணவு படைப்பதையும் பெரு மகிழ்வோடு செய்து வந்தார்கள். இப்படியே நாட்கள் சென்று கொண்டிருந்தால் எப்படி? சிவன் அவர்களுடன் ஒரு திருவிளையாடல் செய்ய எண்ணம் கொண்டார்.

பொருள் இருக்கும் காலத்தில்

மட்டுமல்ல பொருள் அற்றுப் போகும் காலத்திலும் அருளற்றுப் போகாமல் தொண்டு செய்யக் கூடியவர்கள் இவர்கள் என்று இவ்வுலகுக்கு உணர்த்த விரும்பினார் எம்பெருமானார். இதனால் உழவின் அறுவடை குறைந்து வர உணவு படைக்க வேண்டிய சிவக்கூட்டமோ பெருகி வர செல்வமோ சுருங்கி கொண்டே வந்தது. உழவு செய்ய சிறிது நிலத்தை மட்டும் வைத்துக் கொண்டு எல்லாவற்றையும் விற்றும் கடன் வாங்கியும் கூட உணவு படைக்க ஆரம்பித்தார் மாறனார்.

மாட மாளிகையில் வசித்தவர்கள் கால மாற்றத்தால் ஒரு குடிசையைக் கட்டிக் கொண்டு இடம் பெயர்ந்தார்கள். ஒரு நாள் நள்ளிரவு இருக்கும். வெளியே காற்றும் புயலும் மழையும் இடியும் மின்னலுமாக இருந்தது. குளிரும் பசியும் அவர்களை வாட்டியது. பொட்டுத் தூக்கமில்லை. அவர்கள் வீட்டுக் கதவைத் தட்டினார் ஒரு சிவனடியார். அந்நேரத்திலும் அகம் மலர எழுந்து வந்து அவரை உபசரித்து ஆசனம் அளித்தார்கள் மாறனாரும் அவர் மனைவியும். ”கொஞ்சம் பொறுங்கள் சாமி. சூடாக அமுது படைத்து அளிக்கிறோம்” என்று மாறனார் சொல்ல சிவனடியாரும் சம்மதிக்கிறார்.

வீட்டில் குந்துமணி அரிசி இல்லை. ஏனெனில் அன்றைய பகல் பொழுதில்தான் தன் சிறிய நிலத்தில் வீட்டில் மிச்சமிருந்த விதை நெல்மணிகளை விதைத்து விட்டு வந்திருந்தார் மாறனார். மனைவியோ மாறனாரைத் தனியே அழைத்து, “ இன்று விதைத்த அந்த நெல்மணிகளை எடுத்து வாருங்கள். நான் தோட்டத்துக் கீரைகளைப் பறித்து வெஞ்சனம் செய்கிறேன்” என்று கூறிக் கணவரிடம் ஒரு

கூடையைக் கொடுத்தனுப்பினார்.

திசை தெரியாத கும்மிருட்டு. அவ்வப்போது அடித்த மின்னலில் தட்டுத் தடுமாறி நடந்து மாறனார் வயலை அடைந்தார். அங்கோ சேறும் சகதியுமாக உழப்பிக் கிடந்தது நெல் வயல். விதைத்த நெல்மணிகள் எல்லாம் வரப்போரம் நகர்ந்து மிதந்து கொண்டிருந்தன. தான் கொண்டு சென்ற கூடையில் அவற்றை எல்லாம் சேற்றோடு வாரி எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தார் மாறனார்.

தோட்டக் கீரையைப் பறித்து ஆய்ந்து வைத்திருந்த மனைவியோ அடுப்பெரிக்க விறகில்லாமல் கணவருக்காகக் காத்திருந்தார். மாறன் நாயனார் உள்ளே வந்ததும் விஷயத்தைச் சொல்ல அவரோ ஒரு கணமும் யோசிக்காமல் கூரையின் ஒரு பக்க மரக்கட்டைகளை உருவி வெட்டிக் கொடுத்தார். மனைவி அந்த விதை நெல்லை வாங்கி அலசிக் களைந்து வறுத்துக் குத்திப் புடைத்து அரிசியாக்கி மரக்கட்டைகளை வைத்து அடுப்பெரித்துக் கறியமுதும் அன்னமும் சமைத்தார்.

அன்பர் பூசைக்காக அயராது கணவன் மனைவி இருவருமே ஒருமனதாகச் செயலாற்றியதை எல்லாம் பார்த்துக் கொண்டே யிருந்தார் கருணை வடிவான கடவுள். இலையில் சுடச் சுட அன்னத்தையும் கறியமுதையும் பரிமாறி அவரை வணங்கி உள்ளன்போடு ”ஐயனே அமுது செய்து அருள்வீர்” என்று பரிவுடன் அழைத்தனர் இருவரும். பரிமாறிய உணவிலிருந்து சுவையான மணத்தோடு ஆவி பறந்து கொண்டிருந்தது

கணவன் மனைவி இருவருமே எந்த இடையூறிலும் தம்மையோ விதியையோ நோகாமல் குடியிருப்பைப் பிரித்துக் கடைசிக் கையிருப்பாக இருந்தவற்றையும் சமைத்துப் பரிமாறியது கண்ட அயர்ந்த ஈசன் அச்சிறிய குடிசையில் சோதிப் பிழம்பாகத் தோன்றினார். சிவனடியார் சோதி வடிவானது கண்டு மாறனாரும் அவர் மனைவியும் திகைத்து நிற்க, உமாதேவியுடன் ரிஷபாரூடராகக் காட்சி அளித்தார் சிவபெருமான். “ அன்பர் பூசையில் அயராத அன்பர்களே! வறுமையிலும் செம்மையாய் சிவனடியார்களுக்கு உணவிட்ட நீங்கள் சிவலோகம் அடைந்து பேரின்பம் பெறுவீர்களாக” என்று அருளிச் செய்தார். அதன் பின் ஈசனருளால் செல்வம் மீண்டும் பெருகப் பல்லாண்டு காலம் திருத்தொண்டர்களுக்கு உணவு படைத்து முடிவில் ஈசனின் திருவடி நீழலில் பேரின்பம் அடைந்தார்கள் மாறனாரும் அவர் மனைவியும்.

சிவாலயங்களின் சிறப்புகள் - 11

சிவனேச செல்வர்களுக்கு பணிவான வணக்கங்கள்.

சிவாலயங்களின் சிறப்புகளை மாதம் ஒரு திருக்கோயில் என எழுத இருக்கிறேன். இந்தத் தகவல்கள் கோயிலின் ஆலய குறிப்புகளில் இருந்தும் கோயில் குருக்கள் சொல்வதை வைத்தும் எழுதி எழுதியுள்ளேன்.

வே.இராமசாமி, B.Com.F.C.A.,
Chartered Accountant
பலவான்குடி

திருக்கோடிக்காவல்

பகுதி – 2

திருக்கோடிக்கா ஸ்தலத்தின் பெருமைகள்

1. சிவனின் தேவாரப்பாடல் பெற்ற சிவாலயங்களில் 37 வது தேவாரத்தலம் திருக்கோடிகா.

2. இத்தலம் 1008 ஈஸ்வரர்களால் சூழப்பட்ட உள்ளது. இங்கு சிவன் சுயம்புமூர்த்தியாக அருள்பாலிக்கிறார்

3. ஈசனால் சம்ஹாரம் செய்யப்பட்ட எமனை உயிர் பெறச் செய்வதில் இத்தலத்து விநாயகர் பேருதவி செய்ததால் கரையேற்று விநாயகர் எனப் பெயர் பெற்றிருக்கிறார்

4. ஆனி மாதம் 19 20 21 ஆகிய தேதிகளில் சூரிய பகவானின் ஒளிக்கரங்கள் இந்த ஸ்தலத்து இறைவனின் மேல் பட்டு சூரிய பகவான் இறைவனை வழிபடுவதாக ஐதீகம்

5. லலிதா சகஸ்ரநாமத்திற்கு மஹானான ஸ்ரீபாஸ்கரராயரால் இங்கு தான் முதல் முதலில் உரை எழுதப்பட்டுள்ளது

6. சிவபெருமானின் 64 லீலைகளும் இங்கு சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளது

7. பல்லவர்கள், முத்தரையர்கள், பாண்டியர்கள், சோழர்கள் காலக் கல்வெட்டுகள் மொத்தம் 50 உள்ளன.

8. அகஸ்தியர் திரிகோடி மந்திர தேவதைகள் வேண்டுகோளின்படி அவர்களுக்கு அத்யாத்ம வித்தையை உபதேசம் செய்து முத்திரைகளை சொல்லித் தந்த புண்ணிய பூமி இது

9. சிவ பூஜை விதிகளையும் எல்லா மந்திர சாஸ்திரங்களையும் அகஸ்தியர்இங்குதான் கற்றுக்

கொடுத்தார்

10. திருக்கோடீஸ்வரர் சஹஸ்ர நாமம் அபூர்வமானது. இதற்கு சமம் எதுவும் கிடையாது. த்ரிகோடிஸ்த: த்ரி கோட்யங்க:த்ரிகோடி பரிவேஷ்டித:என்று ஆரம்பமாகும் இந்த சஹஸ்ரநாமத்தை திரிகோடி மந்திர தேவதைகளுக்கு அகஸ்தியர் கற்றுக்கொடுத்தார்

11. காசியைப் போல இத்தலத்தில் வாழ்பவர்களுக்கும் யமபயம் கிடையாது. இந்த நம்பிக்கையை உறுதி செய்வது போல இவ்வூரில் ருத்ரபூமி (மயானம்) தனியாக இல்லை. இவ்வூரில் மறிப்பவர்களை காவிரி நதியின் மறுகரைக்கு கொண்டு சென்று தகனம் செய்யும் வழக்கம் தொன்று தொட்டு இன்றுவரை தொடர்கிறது.

12. எல்லா சிவன் கோயில்களிலும் காணப்படும் சுதை வேலைபாடுகள் எதுவும் இக்கோயிலில் கோபுரத்திலோ அல்லது மதிற்சுவர்களிலோ காணப்படவில்லை

13. சனீஸ்வரனின் மனைவியான ஜேஷ்டாதேவி, மகன் மாந்தி, மகள் மாந்தாவுடன் உள்ள சிலை உள்ளது. மாந்தாவின் கையில் தாமரை மலரும், மாந்தியின் முகம் ரிஷப முகமாயும், இம்மூன்றும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டு அற்புதமாய் காட்சியளிக்கிறது

14. இத்தலத்தில் சிவனை எமதர்மராஜன் பூஜிப்பதால் நவக்கிரகம் கிடையாது

15. இங்குள்ள சனி பகவான் தலையில் சிவலிங்கம் ஒன்று உள்ளது. இந்த சனி பகவான் ‘பால சனி’ என்று அழைக்கப்படுகிறார்.

16. பொதுவாக சனி பகவானுக்கு

காகம்தான் வாகனமாக இருக்கும். ஆனால் இங்குள்ள பால சனி பகவானுக்கு கருடன் வாகனமாக அமைந்திருக்கிறது.

17. மூலவர் கோடீஸ்வரர் கருவறை செல்லும் வழியில் இருபுறமும் சித்தரகுப்தரும், எமதர்மனும் உள்ளனர்

18. : திருக்கோடிக்காவல் திருத்தலத்தின் மிகவும் பிரசித்தமான சந்நிதி, வடுக பைரவர் ஆவார். சிவபெருமானின் 64 வடிவங்களில் பைரவமூர்த்தியும் ஒருவர்

19. ஆழ்வார்களுக்கு அம்பாள் இங்கு வெங்கடாஜலபதியாக காட்சியளித்த தலம். இன்றும் திருக்கோடிக்காவலில் ஒவ்வொரு புரட்டாசி சனிக்கிழமையிலும் நடக்கிறது. அன்று நம் அனைவருக்கும் திருமாலாக திரிபுரசுந்தரி அம்பாள்



காட்சி தருகிறாள்

இதன் புராணக் கதை : ஆழ்வார்கள் வெங்கடாஜலபதியின் தரிசனத்திற்காக திருப்பதி சென்றார்கள். அங்கு இறைவன் அவர்களுக்கு காட்சி தரவில்லை. மாறாக திருக்கோடிக்காவில் ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாள் நீங்கள் விரும்பும் தரிசனம் கொடுப்பாள் அங்கே செல்லுங்கள் என்று அசரீரியாக உத்தரவு பிறந்தது. ஆழ்வார்களும் ஆவலுடன் புறப்பட்டு திருக்கோடிக்காவை அடைந்தனர். ஊரை நெருங்கிய போது காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அதைக் கடந்து வரமுடியாமல் ஆழ்வார்கள் சிரமப்பட்டபோது அகத்திய முனிவர் அவர்கள் முன் தோன்றி ஆலயத்திலுள்ள கரையேற்று விநாயகரை மனதில் பிரார்த்தித்துக் கொள்ளும் படி கோரினார். அவர்களும் அவ்வாறே செய்ய காவிரியில் வெள்ளம் குறைந்தது. ஆழ்வார்கள் கரையைக் கடந்து ஆலயத்தினுள் வர அங்கு அம்பாள் அவர்களுக்கு வெங்கடாஜலபதியாக தரிசனம் தந்தருளினாள்

20. இக்கோயில் கண்டாதித்தசோழன் மனைவி செம்பியன்மாதேவியால் கற்றளியாக்கப்பட்டது

21. கோடீஸ்வரர் என்ற திருநாமத்துடன் இறைவன் அருள் தரும் ஒரே திருத்தலம் இதுதான். மூன்று கோடி மந்திர தேவர்களுக்கு முக்தி அளித்த ஸ்தலம் திருக்கோடிக்கா

22. இறைவன் சுயம்புலிங்க திருமேனியாக காட்சி தருகிறார்

23. இங்கு தனி சன்னதி கொண்டுள்ள எமதர்மன் கைகளும் கால்களும் விலங்குகளால் கட்டப்பட்டுள்ளது

24. இங்கு உள்ள கரையேற்று விநாயகர் மணலால் உருவாக்கப்பட்டவர் மணலால் உருவாக்கப்பட்டவர் என்பதால் இவருக்கு அபிஷேகம் கிடையாது ஆண்டுக்கு ஒரு முறை மட்டும் தைலக்காப்பு சாத்துவார்கள்

25. கோயிலின் தல வருசம் பிரம்பு மரம் கோயிலின் வட திசையில் உள்ளது

26. புரட்டாசி மாதம் இரண்டாவது சனிக்கிழமை திரிபுரசுந்தரி அம்பாள் பெருமாள் ஆக காட்சியளித்து பக்தர்களுக்கு அருள் தருவார்

27. மூலவர் கோடீஸ்வரர் கருவறை செல்லும் வழியில் இருபுறமும் சித்தரகுப்தரும், எமதர்மனும் உள்ளனர்

திவ்ய தேச கவிதை தரிசனம்

தலைச்சங்காடு என்ற திருத்தலைச்சங்கநாண்மதியம்

அழ. மணிமேகலை,
காரைக்குடி

நூற்றியெட்டு திவ்ய தேசங்களுள் இருபத்தைந்தாவது திவ்யதேசம், தலைச்சங்காடு என்ற தலைச்சங்கநாண்மதியம். சோழ நாட்டுத் திருப்பதிகளுள், இது இருபத்தைந்தாவது திவ்யதேசமாகும். சீர்காழிக்குத் தென்கிழக்கே சுமார் 12 மைல் தொலைவில் உள்ள இத்தலத்திற்கு, சீர்காழியிலிருந்து ஆக்கூர் செல்லும் பேருந்தில் சென்றால், இத்தலத்தை அடையலாம். சீர்காழி ஸ்ரீ பூம்புகார் சாலையைக் கடந்து, சிறிது தூரத்தில் பூம்புகாரக்கான அலங்கார நுழைவு வாயில் தென்பட்டதும், வலப்பக்கம் செல்ல வேண்டும்.

இத்தலம் தலைச்சங்காடு என்றுதான் தற்பொழுது சொல்லப்படுகின்றது. பூம்புகாரில் இருந்து கொண்டு வரும் அழகான தலைசிறந்த சங்குகளை விற்பனை செய்யும் தலைமை இடமாக இருந்ததாலும், புரசமரங்கள் வளர்ந்து காடு போல் இருந்ததாலும், இவ்விடம் தலைச்சங்காடு எனப்பட்டது. விலைமதிப்பற்ற சங்கு ஒன்றை இத்தலத்துப் பெருமாள் ஏந்தியிருப்பதாலும், இத்தலம் தலைச்சங்கானம் ஆயிற்று.

சந்திரனைப் போல் குளிர்ந்த முகமுடைய இத்தலத்துப் பெருமாள், இங்கே சந்திரனுக்குத் தரிசனம் தந்து, அவருக்கு சாபவிமோசனம் கொடுத்ததால், இத்தலத்துப் பெருமாள் சந்திரசாபஹரப் பெருமாள்



அன்பு காண்பிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார் மாமனார். சொன்ன பேச்சைக் கேட்காத மருமகனைக் கூப்பிட்டு, “என் கட்டளையை மீற நடந்த உனக்கு ஷயரோகம் வரட்டும்“ எனச் சாபமிட்டார்.

பயந்த சந்திரன், மாமனார் காலடியில் விழுந்து சாபவிமோசனம் வேண்டினார். “சாபம் தீர விஷ்ணுவைக் கும்பிடு“ என்று சந்திரனிடம் சொல்லிவிட்டார் தச்சன். ஸ்ரீரங்கம், திருஇந்தளூர் ஆகிய இருதலங்களிலும் பெருமாளை வழிபட்ட சந்திரன், இறுதியாக இங்குள்ள புஷ்கரணியில் வந்து நீராடினார். விஷ்ணுவும், சந்திரனின் வெப்பத்தைப் போக்கிக் குளிரூட்டி, சந்திரனின் சாபத்தைப் போக்கி, சிவனைப் போலவே, இத்தலத்துப் பெருமாளும் சந்திரனைத் தலையில் சூடிக்கொண்டார். மதி என்றால் சந்திரன். நாள்மதியன் என்றால் தினப்படி எழுகின்ற சந்திரன். தலைச்சங்கத்தில் இப்பெருமாள் எழுந்தருளியிருப்பதால், இவர் தலைச்சங்கநாண்மதியன் என்று என்றும் நாண்மதிப் பெருமாள் என்றும் அழைக்கப்பெற்றார். தினந்தோறும், தினந்தோறும் சந்திரனைப் போல் குளிர்விப்பவர் நம் நாண்மதியப் பெருமாள்.

தச்சன் என்ற அரசனுக்கு 27 பெண்மக்கள். அம்மன்னர், 27 நட்சத்திரங்களான 27 பெண்மக்களையும், சோமவாரத்திற்கு அதிபதியான சோமன், அதாவது திங்கள் எனப்படும் சந்திரனுக்கு, திருமணம் செய்து கொடுத்தார். 27 பேர்களில், ரோகிணியிடம் மட்டும் தனி அன்பு செலுத்தினார். பொறுத்துப் பொறுத்துப் பார்த்துச் சகிக்க முடியாமல் மற்ற 26 பேரும் தச்சனிடம் போய் முறையிட்டனர். எல்லோரிடமும், ஒரே மாதிரி

அழைக்கப்படுகிறார். இங்குள்ள

மூலவர்–நாண்மதியப்பெருமாள்

தாயார் – தலைச்சங்கநாச்சியார்

உற்சவர் – வெண்சுடர்ப்பெருமாள்

உற்சவத்தாயார் – செங்கமலவல்லி

விமானம் – சந்திரவிமானம்

தீர்த்தம் – சந்திரபுஷ்கரணி

தலவிருட்சம் – புரசமரம்

கோலம் – கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம்

காப்பியக்கவிஞர், நற்றமிழ்நாவலர் கவிஞர்கோ. நா.மீனவனார் "தலைச்சங்கநாண்மதியம்" குறித்து எழுதிய ஐந்து பாடல்களின் பொருள்களும் பாடல்களும் பின்வருமாறு.

1.குளிர்ந்த தாமரை மலர்கள் கமழ்கின்ற தலைச்சங்க நாண்மதியத்தில், விண்ணிருப்போர் தொழுவதற்காக வெண்சுடரான் வீற்றிருக்கின்றான். கையில் ஒரு சக்கரத்தைக் கொண்டு இத்தலத்தில் வீற்றிருக்கின்ற நாண்மதியப்பெருமாளை ஒருமுறை தரிசித்தால், பின் என்றென்றும் நம் கண்களுக்குள்ளேயே இருந்திடுவான். அதனால் கவலை யில்லாமல் வாழலாம்.

தண்ணார்பொன் மலர்கமழும் தலைச்சங்க நாண்மதியம்
விண்ணோர்கள் தொழநின்ற வெண்சுடரான் ஓராழி
நண்ணுகரம் கொண்டிட்ட நாண்மதியப் பெருமாள்நம்
கண்ணுளே இருந்திடுவான் கவலையின்றி வாழுமினே.

2.பெருமானின் திருமுக ஒளியும் நிலவொளி போல் தோன்றுகின்றது என்பது ஆழ்வார்களின் புகழ்மாலை. "திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்" என்றும் "கதிர்மதியம் போல் முகத்தான்" என்றும் ஆண்டாள் மயங்கிய பெருமாள் இவர். அவ்வாறு திங்களும் ஆதித்தியனும் சேர்ந்து எட்டுத்திசைகளில் ஒளிர்வது போல் ஒளிர்கின்ற தலைச்சங்க நாண்மதியப் பெருமாள், தன் கையில் விசேஷமான சங்கு ஒன்றை ஏந்திக்கொண்டு, செங்கமலவல்லி நாச்சியாருடன் சேர்ந்து வீற்றிருக்கின்றான். அவனை வணங்குவோருக்கு மங்காத செல்வம் மனையில் வந்து சேரும்.

திங்களுடன் பகலவனார் திசையெட்டும் ஒளிர்ந்தாற்போல்
தங்கரத்தில் சங்கேந்தித் தலைச்சங்க நாண்மதியம்
செங்கமல வல்லியுடன் சேர்ந்தே இருக்கின்றான்
மங்காத செல்வம் மனைசேர வணங்குதிரே.

3.காவிரி நதி கலக்கின்ற காவிரிப்பூம்பட்டினம் என்னும் பூம்புகாருக்கு அருகில், சோலையில்

பூக்கள் மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருக்கும் வேளையில், தேவர்கள் தொழுகின்ற பெருமானை, செம்பவள வாயை உடைய பெருமானை, திருமங்கையாழ்வாரின் பாசுரங்களில் பாடுபொருளாய் இருக்கின்ற பரம்பொருளைப் போற்றுவோம்.

காவிரியாள் கலக்கின்ற காவி ரிப்பூம் பட்டினத்தில்
பூவிரியும் சோலைவளர் புதுமலர்கள் மணம்பரப்பத்
தேவர்தொழும் செம்பவளத் திருவாயான் திருமங்கை
பாவிரித்த பாசுரத்தின் பரம்பொருளைப் போற்றுமினே.

4.ஒருமுறை, ஆயர்பாடியில் இந்திரனுக்கு வழிபாடு செய்ய எல்லோரும் தயாராகிக் கொண்டிருந்தனர். அப்போது, கண்ணன் அவர்களை நோக்கி, “இந்திரனுக்கு ஏன் பூஜை செய்ய வேண்டும்?” என்று கேட்டதற்கு, அவர்கள், இந்திரன் வருணதெய்வமாக இருப்பதால் விழா எடுப்பதாகக் கூறினர். அதைக் கேட்ட கண்ணன், “நம் கண்முன்னால் உயர்ந்து நிற்கும் கடவுளான இந்த கோவர்த்தன கிரியைப் பாருங்கள். நம் கால்நடைச் செல்வங்கள் எல்லாம், இம்மலையின் மீதுதான் மேய்கின்றன. தாகம் தீர்க்கும் ஊற்றுகளும் சுனைகளும் இம்மலையில் நிறைந்து காணப்படுகின்றன. நமக்குத் தேவையான பழங்களும் காய்கறிகளும் இம்மலையில் விளைகின்றன. மழை மேகங்களைக் கூட இம்மலைதான் நமக்குப் பொழிவிக்கின்றது. இம்மலையை விடுத்து, வேறு தெய்வத்தை வணங்க வேண்டியது இல்லை. எனவே கோவர்த்தன கிரியை வணங்குங்கள்“ என்று சொன்னான்.

அதைக் கேட்ட மக்கள் கோவர்த்தனமலையைப் பூஜித்தனர். இதனால் கோபமுற்ற இந்திரன், கடுமையான மழையைப் பெய்வித்து, ஆயர்பாடியே இல்லாமல் செய்ய முயன்றார். எல்லோரும் கண்ணனிடம் வந்து சரணடைந்தனர். கண்ணன், கோவர்த்தனமலையைத் தன் பிஞ்சுவிரலால் தூக்கிக் குடையாகப் பிடித்தான். அக்குடையின் கீழ் அனைத்து ஜீவன்களும் நின்று உயிர்பிழைத்தன. இவ்வாறு குன்றையே குடையாகப் பிடித்தவன், குழலூதும் நம் கோவிந்தன்.

கண்ணன் ஆயர்பாடியில், நந்தகோபன் மனையில் யசோதையின் இளஞ்சிங்கமாய் வளர்ந்து வருகிறான். இதனையறிந்த கம்சன், இரு அரக்கர்களை ஏவிக் கண்ணனைக் கொல்வதற்காக அனுப்புகிறார்.

ஒருவன் விளாம்பழமாகவும், மற்றவன் கன்றாகவும் வந்திருந்தனர். கண்ணன் தருணம் பார்த்து, கன்றை எடுத்து விளாம்பழத்தின் மேல் எறிந்தான். கன்றும் இறந்தது. விளாம்பழமும் வீழ்ந்து சிதைந்தது. இவ்வாறு கன்றைக் கொண்டு விளாங்கனியை எறிந்த பெருமான், கரியமாணிக்கம் போன்றவன்.

அன்று தன் ஒரு அடியால் உலகையே அளந்தவன். அவனடியைப் போற்றி வணங்கினால், என்றும் நல்லருள் கிடைத்து ஈடேறுவது உறுதி என்பதால் அவனடியைப் போற்றுவோம்.

குன்றையே குடையாக்கும் கோவிந்தன் குழல்வாயன்
கன்றாலே விளவெறிந்த கரியதிரு மாணிக்கம்
அன்றுலகம் அளந்தமால் அவனடியைப் போற்றுபவர்
என்றும்நல் அருள்பெறுவார் ஈடேற வணங்குமினே.

5. ஒளிவீசும் பொன் வளையல்களை அணிந்த ஆண்டாளை வந்து மணம்புரிந்தவன், வடவால் என்னும் ஆலமரத்தின் கீழ் உறைபவன், அரவு எனப்படும் பாம்பின் மீது துயிலும் பரந்தாமன் ஆவான். அவனுடைய அடியைத் தொழுதால், உலகில் உயர்வு பெறல் உறுதி.

சுடரும்பொன் வளையலணி சோதியாம் ஆண்டாளை
வடவாலின் கீழுறைவான் வந்துமணம் புரிந்தானை
படஅரவின் மிசைத்துயிலும் பரந்தாமன் என்பான்தன்
அடிதொழுதார் உயர்வுபெறல் அகிலத்தில் நிச்சயமே.

மங்களாசாசனப் பாடல்

பார்த்த கண்களை மீட்டுக் கொள்ள முடியாதபடி, காட்சிதரும் திருக்கண்ணபுரத்திலும், சோளிங்கபுரத்திலும், வாசனையுள்ள குளிர்ச்சியான தாமரைகள் நிறைந்த தடாகங்கள் சூழ்ந்த தலைச்சங்கத்தில் மேற்குத் திசையில் தேவர்கள் நாள்தோறும் அனுபவிக்கும் சந்திரன் போன்றவனை, உதயகாலத்துச் சூரியனை அடியேனின் விழிகள் திருப்தியடையும்படி தரிசித்து சந்தோஷப்படும் நாள் என்று வருமோ? என ஏங்கும் திருமங்கையாழ்வாரின் இரண்டு மங்களாசாசனப் பாடல்களுள் ஒன்று.

கண்ணார் கண்ணபுரம், கடிகை, கடிகமழும்
தண்ணார் தாமரைசூழ் தலைச்சங்கமேல் திசையுள்
விண்ணோர் நாண்மதியை விரிகின்ற வெஞ்சுடரை
கண்ணாரக் கண்டுகொண்டு களிக்கின்றது இங்கு என்றுகொலோ?

பெரியபுராணக் கதைக் களம்

பகுதி – 5

அன்பர்களே !

தொண்டர்தம் பெருமை அளவிடற்கு அரியது. அவர்களின் அருள் வரலாறு நம்மை நல்வழியில் நடத்தும். திருநெல்லையின் இவ்விதழில் புதுமை இணைப்பாக பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள அறுபத்து மூன்று அருந்தொண்டர் கதைகள் ஒவ்வொன்றாக காதுகளுக்கும், கண்களுக்கும் மனதிற்கும் இன்பம் சேர்க்கும் வகையில் கதைவடிவில் ஒளிபரப்பாகிறது. கேட்டு, உணர்ந்து அனுபவித்து மகிழுங்கள்.

தென் சபாநாயகர் கோயில் தரிசனம்

கந்த சஷ்டியை முன்னிட்டு 2.11.2024 முதல் 7.11.2024 வரை தினமும் அருள்மிகு ஆறுமுகப்பெருமானுக்குச் சிறப்பான முறையில் அபிடேக, ஆராதனைகள் நடைபெற்றன.

வருகின்ற 15.11.24 அன்று மாலை 6 மணி அளவில் அருள்மிகு ஆதிமூல நாதருக்கும், படிகலிங்கத்திருமேனிக்கும் அன்னாபிடேகம் நடைபெற உள்ளது. கார்த்திகை மாத வழிபாட்டு நிகழ்ச்சிகள்:

கார்த்திகை மாத வழிபாட்டு நிகழ்ச்சிகள்

16.11.24	கார்த்திகை	மாலை ஸ்ரீ ஆறுமுகர் வழிபாடு
18.11.24	திங்கள்	மாலை சங்காபிடேகம்
19.11.24	சங்கடஹர சதுர்த்தி	மாலை விநாயகர் வழிபாடு
23.11.24	தேய்பிறை அஷ்டமி	மாலை வைரவர் வழிபாடு
28.11.24	பிரதோஷம்	
08.12.24	வளர்பிறை அஷ்டமி	மாலை வைரவர் வழிபாடு
02.12.24	திங்கள்	மாலை சங்காபிடேகம்
11.12.24	வளர்பிறை ஏகாதசி	மாலை பெருமாள் வழிபாடு
13.12.24	பிரதோஷம்	
13.12.24	திருக்கார்த்திகை	மாலை விசேட வழிபாடுகள்
15.12.24	பௌர்ணமி	மாலை சிவகாமி அம்மன் வழிபாடு

ஒலிப்பேழை

கம்ப வாரிதியின் பக்கம்

திருநெல்லை இதழில் மாதந்தோறும் கம்பவாரிதி இலங்கை திரு ஜெயராஜ் அவர்களிடம் வினாக்களை எழுப்பி அவ்வினாக்களுக்கு விடையை அவர்களின் குரல் வழியாகப் பெற்று திருநெல்லையில் பதிவிடுகிறோம்.

வினா – 1

சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய திருத்தொண்டர் தொகையில் இல்லாத, மனுநீதிகண்ட சோழனுடைய கதையை, சேக்கிழார் பெருமான் தன்னுடைய காவியத்திலே விரிவாக எடுத்துரைத்திருப்பதன் காரணம் என்ன?

விளக்கம்

வினா – 2

மனு நீதிகண்ட சோழன் கதையிலே, சிவபெருமான் இறந்தவர்களை உயிர்பிக்கும் தருணம் பற்றி சேக்கிழார் எழுதுகையில், முதலில் பசுவின் கன்று, இரண்டாவது இளவரசன், மூன்றாவது மந்திரி என ஒரு வரிசையை பின்பற்றியிருக்கிறாரே அது ஏன்?

விளக்கம்

வினா – 3

கூற்றாயினவாறு பதிகத்தில் “நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன். உன்னாமம்என் னாவில் மறந்தறியேன்” என்று திருநாவுக்கரசர் பாடுகிறாரே, ஒரு காலத்தில் அவர் சமண மதத்தை பின்பற்றினார் அல்லவா அந்த காலத்தில் அவர் இறைவனை மறந்திருக்க வாய்ப்பிருக்கிறது தானே? அப்படி என்றால் அவர் இந்த பாடலில் பொய் உரைப்பதாக பொருள் படுமா?

விளக்கம்

பயிற்சிப் பேழை

ஞானசம்பந்தர் தேவாரம்

திருநாவுக்கரசர் தேவாரம்

சுந்தரர் தேவாரம்

திருப்புகழ்

கோவிலூர் ஆண்டவர் நூலகம்

கோவிலூரில் அமைக்கப்பெற்றுள்ள ”கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில்” சுமார் 44,000 க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. நூல் விவர அட்டவணையைப் பதிவிறக்கம் செய்ய இங்கு சொடுக்கவும்.

கோவிலூர் ஆண்டவர் இணைய நூலகம்



கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில் உள்ள நூல்கள் அனைத்தையும் கோவிலூர் ஆண்டவர் நூலகம் என்ற இணையதள நூலகத்தில் பதிவேற்றம் செய்து தமிழ்க் கொடையாக அளிக்க முடிவு செய்துள்ளோம்.

தற்போது சுமார் 5407 அரிய நூல்கள் இணைய நூலகத்தில் உள்ளன.

இப்போது நாள் ஒன்றுக்கு சுமார் 3000 பக்கங்களைப் புதிதாக இந்த நூலகத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த நூலகத்தில் உள்ள நூல்களை விலை இல்லாமல் படிக்கலாம்/ பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்த நூலகத்தில் உள்ள நூல்களை விலை இல்லாமல் படிக்க / பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில் உள்ள (பட்டியலில் காட்டப்பெற்றுள்ள) எந்த நூலாவது உங்களுக்கு தேவை என்றால் நூலகப் பொறுப்பாளர் திரு வெங்கடாசலம் அவர்களைத் (தொலைபேசி எண் 9442912649 என்பதில்) தொடர்பு கொள்ளவும். அந்த நூல் பதிப்புரிமைக்கு அப்பால் இருக்கும் நிலையில் அதை நம் இணைய நூலகத்தில் சேர்த்திட ஆவன செய்கிறோம். தாங்களும் அந்த நூலை உங்கள் வீட்டில் இருந்து இணையவழியாகப் படிக்கலாம். நூல் இணையத்தில் சேர்த்தபின் உங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படும். நீங்கள் அந்த நூலை இணைய நூலகத்தில் படித்துக் கொள்ளலாம் அல்லது பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதற்கு எந்தக் கட்டணமும் இல்லை

நம் இணைய நூலகம் அமைந்துள்ள archives.org என்ற தளம் சமீபத்தில் முடக்கப்பட்டிருந்தது . இறையருளால் அது தற்போது மீண்டும் செயல்பாட்டிற்கு வந்துள்ள நிலையில் மேலும் பல அரிய நூல்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.ஆகவே, நம் இணைய நூலகத்தில் இனி தங்கு தடை இன்றி நாம் பதிவேற்றம் செய்த நூல்களை பார்க்கலாம், பதிவிறக்கம் செய்யலாம்.

இணைய நூலகத்தைப் பயன்படுத்துவோம். இறை தத்துவங்களை அறிவோம்.

முந்தைய இதழ்களை படிக்க அந்தந்த லிங்கை கிளிக் செய்யவும்

திருநெல்லை – புரட்டாசி

திருநெல்லை – ஐப்பசி

திருநெல்லை – கார்த்திகை

திருநெல்லை – மார்கழி

திருநெல்லை – தை

திருநெல்லை – மாசி

திருநெல்லை – பங்குனி

திருநெல்லை – சித்திரை

திருநெல்லை – வைகாசி

திருநெல்லை – ஆனி

திருநெல்லை – ஆடி

திருநெல்லை – ஆவணி

திருநெல்லை – புரட்டாசி